வெளியீடு எண்: 5.

# கடவுள்

ஆசிரியர்:-

வள்ளலார்

இராமலிங்கர் அச்சகம்,
கூடலூர் ஓ. டி.

கூடலூர் ஓ. டி. இராமலிங்கம் அச்சகத்தில்
பதிப்பிக்கப் பெற்றது.

1953

விலை [illegible]-1-0

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 4 | 22 | நெருப்பை | நெருப்பு |
| 10 | 25 | என்பது | என்பதை |
| 13 | 9 | எற்படுவதாக | ஏற்படுவதாக |
| 19 | 22 | ஒவொரு வருக்கும் | ஒவ்வொருவருக் கும் |
| 23 | 4 | உடலை | உயிரைப் |
| ,, | 19 | அவ்வழிமில் | அவ்வழியில் |

# பொருளடக்கம்.


| எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஐம்பெரும் பொருட்கள் | 1 |
| 2. | ஐம்பெரும் பொருட்களின் தன்மை | 3 |
| 3. | ஐம்பெரும் பொருட்களும் உலகநிகழ்ச்சியும் | 5 |
| 4 | உடல் | 9 |
| 5 | உயிர் | 12 |
| 6. | உயிரும் உடலும் | 17 |
| 7. | மூலப்பொருள் அல்லது கடவுள் | 25 |
| 8. | உலகமும் கடவுளும் | 30 |
| 9. | உயிரும் கடவுளும் | 36 |
| 10 | கடவுளும் அதன் தன்மையும் | 46 |

# கடவுள்.

வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய
சங்கத்தின் (தலைமைச்சங்கம்)
துணைத்தலைவரும் கூடலூர்
இராமலிங்கம் அச்சகத்தின்
உரிமையாளருமாகிய

## வள்ளலார்

அவர்களால் இயற்றப்
பட்டு அன்னாரது அச்சகத்தில்
கூடலூர் இராமலிங்கம் பெனிபிட்
பண்டாரால் அச்சியற்றப் பெற்றது.

1953

# கடவுள்.

## முன்னுரை.

கடவுள் என்பதாக ஒரு பொருள் உண்டா, இல்லையா? என்னும் ஐயப்பாடு மக்களிடையே இருந்துவருவது யாவரும் அறிந்ததே. கடவுள் உண்டு என்ற நம்பிக்கையிலும் கொள்கையிலும் உள்ளவர்கள் பலர். கடவுள் என்பதாக ஒரு பொருள் இல்லை என்ற கொள்கையில் உள்ளவர்கள் சிலர். கடவுள் என்பதாக ஒரு பொருள் இருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? அதைப்பற்றி கவலையோ அல்லது ஆராய்ச்சியோ தேவையில்லை என்று இருப்பவர்கள் சிலர். இவ்வாறாக முத்திறப்பட்ட நிலையில் மக்கள் இருந்துவருவதால் மக்களனைவரும் செம்மையாக ஆராய்ந்து தக்க காரணங்களைக்கொண்டு கடவுள் என்னும் பொருள் உண்டு என்னும் உண்மையையும் அப்பொருளின் தன்மை எவ்வாறு உள்ளது என்பதையும் அறிவோடுகூடிய மக்கட் பிறவி எடுத்த அனைவரும் உணரவேண்டியது இன்றியமையாத கடமையாகிறது.

இந்நூலில் சில தக்க அறிவியற்காரணங்களைக்கொண்டு கடவுள் உண்டு என்னும் உண்மையை விளக்கமாகவும் வலியுறுத்தியும் கூறப்பட்டிருக்கிறது. சில படித்தவர்களுக்குள்ளேயும் கடவுள் என்பதாக ஒரு பொருள் இல்லையென்ற கருத்து எக்காரணம் பற்றியோ வாழ்க்கையில் வேரூன்றியிருப்பதையும் காண்கிறோம். மேலெழுந்தவாரியாக பார்ப்பவர்களுக்கு இல்லையென்று தோன்றலாம். கடவுள் என்ற பொருள் எவ்வாறு எங்குளது என்ற ஐயம் ஏற்படலாம். உலகத்திலே வாழ்க்கையும் பலவித செயல்களும் காட்சிகளும் மக்கள் கூட்டுறவு முயற்சியாலோ அல்லது தனித்த முயற்சியாலோதான் நடைபெற்று வருகின்றதேயொழிய

இவைகளுக்கு காரணமாக ஒரு பொருள் என்னவிதமாக எந்த வடிவத்தில், எந்த இடத்தில் இருந்துகொண்டு செயலாற்றிவரக்கூடுமென்று பல ஐயப்பாடுகள் மக்கட்கு எழுவது இயற்கையே.

ஆயினும் நம்மிடையே காணப்படும் பல அரிய நிகழ்ச்சிகள், காட்சிகள், மாறுதல்கள் தோற்றங்கள் இன்னோரன்ன பிறவற்றை நம்முடைய அறிவின் ஆற்றலைக்கொண்டு செவ்விய முறையில் வெகு நுட்பமாய் ஆழ்ந்து உய்த்துணரும்போது கடவுள் என்பது எல்லையற்ற ஆற்றலுடன் எங்கும் நிறைந்து எல்லா பொருட்களும் இயங்குவதற்கு மூல காரணமாக நிற்கின்றது என்னும் பேருண்மையை மகிழ்ச்சியுடன் உணரக்கூடும் என்பது ஒருதலை.

எனவே இதுகாறும் கூறியவற்றைக்கொண்டு இந்நூலை படிப்போர் அதில் காணப்படும் உண்மைகளையும் பொருட்களையும் காய்தல், உவர்த்தலின்றி ஆழ்ந்து படித்து செம்மையாக சிந்தித்து உண்மையான முடிவு காணவேண்டுமென்பதேஇந்நூலை வெளியிட்டதின் நோக்கமாகும்.

கூடலூர் ஓ. டி.
13—3—1953

வள்ளலார்
ஆசிரியர்

# கடவுள்.

கடவுள் என்னும் சொல்லானது உள்ளத்தைக் கடந்தது என்றும் உடலினுள்ளே உள்ளது என்றும் பொருளளித்து நிற்கின்றது.

## ஐம்பெரும்பொருட்கள்.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக உள்ளன நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும்பொருட்களாகும் என்ற உண்மை யாவரும் அறிந்ததும் மறுக்கமுடியாததுமாகும். இவைகளிலே மக்கள் வாழ்க்கைக்கு ஒவ்வொன்றும் வேண்டற்பாலதே. எடுத்துக்காட்டாக நிலம் இன்றேல் எப்பயிரும் விளைவதற்கும் மக்கள் முதலியன தங்குவதற்கும் இடமேது? அஃதன்றியும் நிலமின்றேல் யாதொரு நிகழ்ச்சியும், காட்சியும் நிகழ்வதற்கும் காண்பதற்கும் இல்லை. காட்சியை காண்பவர்களும் இருக்கமுடியாது. எனவே நிலம் இன்றேல் எல்லா உயிர்களும் தங்கியிருக்கவோ வாழவோ வளர்ச்சி பெறவோ யாதொரு செயலும் புரியவோ இயலாதென்பது கண்கூடு.

நிலம் மட்டில் இருந்து நீரில்லையெனில் அவ்வாறே உயிர்கள் வாழவோ வளரவோ முடியாதென்பது புலனாகின்றது. எவ்வாறெனில் நீரின்றி விளைபொருள் விளையாது. மற்ற மக்கள், விலங்கு, பறவை அனைத்திற்கும் விளைவின்றி பசிநீக்கம் பெற இயலாது உணவுக்கு தேவையான எப்பொருளும் கிடைக்காது. அன்றியும் மக்கட்கும் மற்றவைகளுக்கும் உண்பதற்கு நீர் தேவை. ஆதலால் நீரும் மக்கள் முதலிய உயிர்களுக்கு கட்டாயம் தேவை என்பதும் நீரின்றி வெறும் நிலம் மட்டுமிருந்தால் எந்த உயிர்வாழ்க்கையையும் வெறும் நிலவுலகிலே காண இயலாதென்பது வெள்ளிடைமலை.

நிலம், நீருடனன்றி உயிர்வாழ்க்கைக்கு நெருப்பும் தேவைப்படுகின்றது. நெருப்பின்றி உணவு தயாரிக்கமுடியாது. உண்ணும் உணவு உடலினுள் நெருப்பிருந்தாலன்றி செரிப்பதற்கில்லை. அஃதன்றியும் வெப்பமின்றி தாவர வர்க்கங்கள் உற்பத்தியாகவோ வளரவோ முடியாது. உயிர்வாழ்க்கைக்கு நெருப்பும் இன்றியமையாதது என்று கண்டோம்.

நிலம், நீர், நெருப்புடனன்றி காற்றும் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் காணப்படுகின்றது. காற்று உட்கொள்ளாது எந்த உயிரினமும் மக்களுள்பட சிறிதுநேரங்கூட வாழமுடியாது. மணம் முதலியவற்றை நுகருவதற்கும் ஓசை பேச்சு இசையின் இனிமை இவைகளை கேட்கவும் காற்று காரணமாய் அமைந்துள்ளது மக்கள் வாழ்க்கையில் பல இயக்கங்களுக்கு காற்று பலவிதங்களிலும் துணையாய் நிற்கின்றது. ஆனது பற்றி காற்று வாழ்க்கைக்கு முக்கிய அங்கமாக தேவைப்படுகிறது என்பதை உணர்கிறோம்.

ஐந்தாவது பெரும்பொருளாகிய வெளியைப் பற்றி சிறிது ஆராய்வோம். வெளி இல்லையேல் மக்கள் வீடு முதலியவைகளை அமைத்துக்கொள்ள முடியாது. மக்கள் முதலிய உயிரினங்கள் இயங்குவதற்கு இல்லை. எந்தச்செயலும் நடைபெறுவதற்குமில்லை. சுருங்கக்கூறினல் வெளியே காணப்படும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இடங்கொடுத்து நிற்கின்றது. எனவே ஐந்தாம் பெரும்பொருளாகிய வெளியும் உயிரினங்களின் வாழ்க்கைக்கு மற்ற நான்கு பெரும்பொருட்களைப் போலவே அரணாய் அமைந்துள்ளது என்பதை உணர்ந்தோம்.

மேற்கூறியவற்றைக் கொண்டு நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும்பொருட்களில் எந்த ஒரு பெரும்பொருள் இன்றியும் எந்த உயிரினமும் வாழமுடியாது என்பதையும் ஐம்பெரும்பொருட்களும் எல்லா உயிரினங்களுக்கும் வேண்டற்பாலது என்பதையும் உணர்ந்தோம்.

## ஐம்பெரும் பொருட்களின் தன்மை

நிலம் சுழன்றுகொண்டும் எல்லா பொருட்களையும் தாங்கிக்கொண்டும் நிற்கின்றது. நீர் நிலத்திலே பள்ளங்கண்ட இடத்தில் தங்கியும் ஆறு வாய்க்கால் முதலியவைகளின் வழியாக ஓடிக்கொண்டும் கதிரவன் வெப்பத்தினல் நீராவியாக மாற்றப்பட்டு மேலே சென்று காராக சேர்ந்து குளிர்ந்த காற்று படுங்கால் மழையாகமாறி நிலத்தைநோக்கி மீண்டும் நீராக வருகின்றது நெருப்பானது சார்ந்த பொருளுக்கு வெப்பத்தை அளிக்கின்றது. அல்லது எரிக்கின்றது. காற்று அசையுந் தன்மையுடையது. உயிரினங்களுக்கு நன்மை தீமைகளை அளித்து நிற்கின்றது. கண்ணுக்குத் தென்படாவிட்டாலும் நுகர்ச்சிக்கு புலனுகிறது. வெளி மற்ற நான்கு பெரும்பொருட்களும் தங்கி இயங்குவதற்கு காரணமாகவும் குணங்குறியற்றும் நிற்கின்றது.

ஆனல் மேலே கூறப்பட்ட ஐந்து பெரும் பொருட்களுக்கும் அறிவும் அறிவாலாகும் உணர்வும் இல்லையென்பதை நாம் முக்கியமாக கூர்ந்து கவனிக்கவேண்டும். எடுத்துக் காட்டாக நிலம் சுழன்று கொண்டிருக்கிறதேயன்றி தான். சுழல்கிறேம் என்ற உணர்ச்சி அதற்கில்லை. சுழல்வோம் என்று எண்ணி அது சுழலவில்லை. எண்ணுவதற்கு தேவையான உள்ளம் போன்ற உறுப்பு அதற்கு

இல்லை. திட்டமாக கூறவேண்டுமானல் நிலத்திற்கு அறிவில்லை. நிலத்திலே எந்த நிகழ்ச்சி நடைபெற்ருலும், ஒருவன் பள்ளந்தோண்டினாலும், ஒரு வீடு கட்டினாலும், இருக்கின்ற வீடு இடிந்து விழுந்தாலும் பூகம்பமே ஏற்பட்டாலும் நிலத்தின் ஒருபுறத்தில் நீர் மேற்கொண்டாலும் ஒருபுறத்தில் இருக்கும் நீர் அகன்று நிலம் தென்பட்டாலும் ஆகிய எத் தகைய நிகழ்ச்சிகளையோ மாறுதல்களையோ அறி யக்கூடிய தன்மை அதற்கு இல்லை. எனவே நிலம் உயிர்த்தன்மையற்றது. அல்லது அறிவும் உணர் வும் அற்றபொருள் என்பது நன்கு புலனாகிறது.

நீர் நிற்கும்பொழுதோ, ஆறு கால்வாய் வழி யாக ஓடிக்கொண்டிருக்கும்பொழுதோ கதிரவன் வெப்பத்தினால் நீராவியாக மாறி மேலே செல்லும் பொழுதோ, காராக மாறும்பொழுதோ, குளிர்ந்த காற்று பட்டவுடன் கார் நீராக மாறி நிலத்தை நோக்கி மழையாக பெய்யும்பொழுதோ, பனிக் கட்டியாக மாறும்பொழுதோ மாறுதலுக்கு உட்படு கிறோம் என்பதையும் இன்ன தன்மையிலுள்ளோம் என்பதையும் அறிவதற்கு நீர் ஆற்றலும் அறிவும் உடையதல்ல. எனவே நீரும் அறிவற்ற பொருளே.

நெருப்பை தேவையானபொழுது பயன்படுத் திக்கொள்ளப்படுகிறது. இரம் உள்ள பொருளை நெருப்பு உலரவைக்கிறது. நெருப்பால் சில பொருட்கள் எரிக்கப்படுகின்றன நெருப்பானது மக்களுக்கு தேவையான உணவுப்பொருளைத் தயா ரிக்க இன்றியமையாததாய் இருக்கின்றது. நெருப்பு நற்செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் பயன்படு கின்றது. ஆனாலும் நெருப்பானது எச்செயலுக்கு எம்முறையில் பயன்பட்டாலும் எவ்வண்ணமாக எங் கிருந்தாலும் எதையும் அறிந்து உணரக்கூடிய

தன்மை அதற்கில்லை. ஆகையால் நெருப்பும் அறிவற்றதாகவே இருக்கின்றது.

காற்று அசையும் தன்மையுடையது. சில வேளையில் தானாகவே அசையும். சில வேளையில் அசைவிக்கும்பொழுது அசையும். காற்று கண்ணுக்கு தென்படா நிலையில் நுட்பமான பொருளாக உள்ளது. காற்றின் துணையைக் கொண்டு பல செயல்கள் புரியப்படுகின்றன. காற்றும் பல நற்செயல்களுக்கும் தீச்செயல்களுக்கும் பயன்படுகிறது காற்றிற்கும் தன்னால் ஏற்படும் மற்றைய பொருளின் நன்மையையோ தீமையையோ மாறுதலையோ உணரும் நிலை அறவே இல்லை. காற்றும் அறிவற்ற பொருள் என்பதை உணர்கிறோம்.

வெளியானது மற்ற நான்கு பொருட்களுக்கும் இடங்கொடுத்து நிற்கின்றது. வெளிக்கு போக்கு வரத்தோ அசைவோ கிடையாது. மாறுதலுக்குட்பட்டதுமல்ல காற்றைவிட நுட்பமானது வெளி. இத்தகைய நிலையிலுள்ள விண்ணானது மற்ற நான்கு பெரும்பொருட்களுக்கும் இடங்கொடுத்து நிற்கின்றோம் என்பதையும் அல்லது விண்ணின்றி மற்ற நான்கு பெரும்பொருட்களும் தங்கவோ இயங்கவோ முடியாது என்னும் உண்மையையும் அறியும் தன்மை உள்ளதல்ல. ஆனதால் வெளியும் அறிவுடைப்பொருளல்ல.

## ஐம்பெரும்பொருட்களும் உலக நிகழ்ச்சியும்.

உலகத்திலே ஐம்பெரும்பொருட்களில் தனித்தனியாக எந்த ஒரு பொருளுக்கும் அறிவோ அறியும் தன்மையோ இல்லையென்று மேலே கூறப்பட்டிருப்பதைக்கொண்டு உணரலாயிற்று இனி

ஒன்றோடொன்று சேருவதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி ஆராய்வோம். ஐம்பெரும்பொருட்களில் ஒன்றோடொன்று சேருவதால் பல மாறுதல்களையும் பல நிகழ்ச்சிகளையும் காண்கிறோம். அறிவியல் அறிஞர்கள் தங்கள் அறிவின் திறமையினால் ஐம்பெரும் பொருட்களில் வேண்டியவற்றை துணையாகக் கொண்டு பல அரிய செயல்களைச் செய்து முடித்திருக்கிறார்கள். இவைகளைப்பற்றி பின்னர் ஆராய்வோம்.

உலகத்திலே பூமி அதிர்ச்சியினால் வீடுகளோ பட்டினங்களோ பல நாடுகளில் பாழ்பட்டதை வரலாறு மூலமாக அறிகிறோம். அவ்வாறு தற்பொழுதும் நிகழ்ந்து வருவதுபற்றி செய்தித்தாள் மூலமாக படித்துணர்கிறோம் வீடுகளோ ஊர்களோ பாழானதுபற்றி பூமி அறிவதற்கில்லை. பூமி அதிர்ச்சியால் பாழ்நிலையடைந்த கட்டிடங்களும், ஊர்களும் பாழானோம் என்ற நிலையை அறியும் தன்மை உள்ளன வல்ல என்பது ஒருதலை.

நீரால் வெள்ளமேற்பட்டு ஊர்களும், கட்டிடங்களும் சீர்குலைந்து கெடுவதைக் காண்கிறோம். ஆனால் அவைகளை அழித்த நீருக்கும் நீரால் அழிக்கப்பட்ட ஊர்கள், கட்டிடங்கள் முதலியவைகளுக்கும் அழித்தோம் என்றோ அழிக்கப்பட்டோம் என்றோ அறியக்கூடிய தன்மை இல்லை.

நெருப்பால் பல பொருட்கள் எரித்து சாம்பலாக்கப்படுகின்றன. எரித்த நெருப்புக்கோ எரிந்து சேதமான பொருட்களுக்கோ எரிவினால் ஏற்பட்ட தன்மையை உணர இருபொருட்களுக்கும் அறிவாற்றல் இல்லை.

காற்று பெரும் புயலாக மாறி ஊரையோ பெரும் பெரும் நிலையங்களையோ மரங்களையோ தகர்த்தெறிகிறது. இங்கேயும் அந்நிகழ்ச்சிக்கு காரணமாய காற்ருே அந்நிகழ்ச்சிக்குட்பட்ட பொருட்களோ நிகழ்ச்சிகளின் விளைவுகளை உணர்வதில்லை.

வெளியானது எல்லா நிகழ்ச்சிக்கும் நன்மை தீமைகளுக்கும் இடங்கொடுத்து நின்ருலும் மற்ற பொருட்களால் ஏற்படும் மேலே சொல்லப்பட்ட நான்கு பொருட்களால் ஏற்படும் விளைவுகளை அறியும் நிலையிலில்லை.

அறிவியல் அறிஞர்களால் மக்களுக்கு பயன் படுவதற்காக கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல அரிய பொருட்களைப் பற்றியும் கருவிகளைப் பற்றியும் ஆராய்வோம்.

புகைவண்டியானது இரும்பு, மரம் முதலிய பொருட்களைக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது. நீராவியைக்கொண்டு ஓட்டப்படுகிறது. புகைவண்டி மக்களுக்கு பெருமளவு பயன்படுவது உண்மையே. ஆனல் அப்புகைவண்டி தானுக இயங்கக்கூடியது அல்ல. அதை அறிவுடைய மனிதன் தான் இயங்கச் செய்கிருன். ஓடும்படி செய்வதற்கு ஐம்பெரும் பொருட்களில் ஒன்ருகிய நீரும் அதை நீராவியாக்க மற்ெருரு பொருளாகிய நெருப்பும் வேண்டற்பாலது அப்படி நீராவியின் துணைகொண்டு புகைவண்டி இயக்கப்படும்பொழுது இயக்கப்படுகிருேம் என்ற உணர்ச்சி அதற்கு கிடையாது. ஓடிக்கொண்டிருப் பதை நிறுத்தப்படும்பொழுது நிறுத்தப்பட்டோம் என்பதும் ஓடாமலிருக்கும்பொழுது வாளாவிருக்கி ருேம் என்ற உணர்ச்சியும் அதற்கு இல்லை

எனவே புகைவண்டி அறிவற்ற பொருள் என்பது சொல்லாமலே விளங்குகின்றது.

இசைத்தட்டு பெட்டியில் வைத்து இயங்க வைத்த உடன் இன்னிசையை எழுப்பி மனதை மகிழவைக்கிறது. ஆனால் இசைத்தட்டு தானாக இயங்கும் ஆற்றல் உடையதல்ல. இயங்கும்பொழுது தான் இயக்கப்பட்டு பாடலை வெளிப்படுத்துகிறோம் என்ற அறிவுடையதல்ல. தட்டிலே அமைக்கப் பட்ட பாடலை அறிவுடை மனிதன் இயக்கும்போது வெளிப்படுத்தும் தன்மை மட்டும் உடையதாக இருக்கிறது.

ஒலிஅலைச்செய்தி (ரேடியோ) பரப்பும் கருவி யானது அரிய வகையில் மக்களுக்கு பயன்படுகிறது ஆனால் அக்கருவிக்கும் தானாக இயங்கக்கூடிய தன்மையும் இல்லை. இயக்கப்படும்பொழுது இயக் கப்படுகிறோம் என்ற உணர்ச்சியும் இல்லை அதை இயக்கும் மனிதன் தான் அதினின்றும் வெளிப் படுகிற நிகழ்ச்சியை அறிந்து இன்புறுகிறான்.

திரைப்படக்காட்சியில் நடிகர்கள் உண்மையி லேயே நடிப்பது போலவும் பாடுவது போலவும் ஆடுவது போலவும் வெள்ளைத்திரையில் தென்படு கிறது உண்மையை உற்று நோக்குங்கால் அங்கே நடிகர்களும் இல்லை. நடிகர்களே அங்கு நடிக்கவு மில்லை. திரைப்படம் தயாரிக்கும் இடத்திலே நடிகர் களை நடிக்கவைத்து பலவித நடிப்புகளுக்கும் நிழல் படங்கள் எடுத்து அறிவுடை மனிதனால் ஆக்கப் பட்ட பொறியின் துணைகொண்டு திரையிலே காட்டப்படும் வெறும் நிழல் தோற்றங்களை மட்டுமே நாம் காணமுடிகிறது. இதனை ஆராயுங்கால் திரை யிலே தான் இயக்கும்பொழுது காட்சிகளைக் கண்டு

பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்வுறுகிறார்கள் என்ற எண்ணமோ அல்லது உணர்ச்சியோ அந்த கருவிக்கு கிடையாது.

இதுகாறும் கூறியவற்றைக்கொண்டு அறிவியலறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட எந்த அரிய கருவியும் பொறிகளும் தானே இயங்கும் தன்மை உடையதல்ல என்பதையும் அவைகளின் இயக்கத்திற்கு ஐம்பெரும்பொருட்களில் சிலவற்றின் துணை மட்டுமின்றி அறிவுடை மனிதனின் கூட்டுறவும் தேவைப்படுகிறது என்பதையும் கண்டோம்.

## உடல்.

எல்லா உயிரினங்களின் உடல்களும் ஐம்பெரும் பொருட்களால் ஆக்கப்பட்டவைகள் ஆகும். உடலுக்குள்ளேயும் ஐம்பெரும்பொருட்கள் அடங்கியுள்ளன. சிறப்பாக ஆறறிவு படைத்த மனிதனின் உடலைப்பற்றி ஆராய்வோம். உடலிலே மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகள் அமைந்திருக்கின்றன. உடலினுள்ளே தலையின் நடுவிலே மனம் என்னும் ஓர் உறுப்பு இருக்கிறது. அது அக உறுப்பு என பெயர் பெறும். முதற்சொன்ன உறுப்புகள் புறஉறுப்புகள் என பெயர் பெறும்

மெய்யானது உணர்ச்சி ஒன்றைமட்டில் அறிவதற்கு பயன்படுகின்றது. ஆனல் உணர்ச்சியை அறிவது மெய்யல்ல. வாயானது சுவை அறிய மட்டில் பயன்படுகிறது. ஆனல் சுவையை அறிவது வாயல்ல. கண் என்னும் உறுப்பு பார்ப்பதற்கு பயன்படுகிறது. ஆனல் பார்க்கப்படும் எந்தப்பொருளையும் உணர்வது கண்ணல்ல. மூக்கானது மணம் அறிவதற்கு பயன்படுகின்றது ஆனல் மணத்தை

நுகர்ந்தறிவது மூக்கல்ல. ஓசையை கேட்பதற்கு பயன்படுவது செவி. ஆனல் ஓசையை கேட்டறிவது செவியல்ல.

எந்த புற உறுப்பும் எந்த பொருளையும் அறிந்துணர்வது இயலாது. ஒவ்வொரு பொறியின் மூலம் புலனுகும் எந்த பொருளும் பொறியின் வழியே உடலினுள்ளே அமைந்திருக்கும் மனம் என்னும் உறுப்பில் சேருகின்றது. அதாவது வெளியே உள்ள எந்த பொருளின் தன்மையையும் உள்ளே உள்ள மனத்தின்பால் சேர்ப்பதற்கு கருவியாக பயன்படுகின்றதேயொழிய எதையும் எந்த புற உறுப்பும் அறிந்துணர்வதில்லை என்பது முடிந்த முடிபாகும்.

உடம்பினுள்ளே அறிவுடைப்பொருளாகிய உயிர் என்பதாக ஒன்று இருந்து உடலையும் உடலிலே உள்ள உறுப்புக்களையும் பயன்படுத்திக்கொண்டு எல்லாவற்றையும் உணர்ந்து பலவித செயல்களைப் புரிந்து வருகிறது என்னும் கொள்கையுடையார் பலர். உடலினுள்ளே உயிரென்பதாக ஒரு பொருள் தனியே கிடையாது என்றும், உடலினுள்ளே இருக்கும் பல அமைப்புகளினுலேயே அறிவு, உணர்ச்சி எல்லாம் ஏற்படுகின்றன என்னும் கொள்கையுடையார் சிலர். உயிரின் இயல்பு பற்றி அடுத்துவரும் இயலிலே விரிவாக ஆராய்வோம். இவ்வியலிலே உடலுக்கு எவ்வாற்ருனும் அறிவோ அறிவாலாகும் உணர்வோ இல்லை என்பது மட்டில் விளக்குவோம்.

எடுத்துக்காட்டாக சேய்மையில் உள்ள ஒரு பொருளை அண்மையில்காட்டும் கருவியைக்கொண்டு பார்க்கிற தன்மையைப்பற்றி கவனிப்போம். அண்மையில் பொருளைப் பார்ப்பதற்கு கருவியாக பயன்

படுகிறதேயன்றி அப்பொருளை கண்ணாடி பார்க்கவுமில்லை. பொருளின் தன்மையை கண்ணாடி உணர்வதுமில்லை. அதேபோல் உடலிலே அமைந்துள்ள கண்ணும் பார்த்தறிவதற்கு கருவியாக பயன்படுகிறதேயன்றி எந்த பொருளைப்பற்றியும் கண் ஒன்றும் உணர்வதற்கில்லை. அதுபோன்றே சிறிய உருவை பெரிய உருவாகக் காட்டுகிறது ஒரு கண்ணாடி. சிறிய பொருளை பெரிய பொருள் போல பார்ப்பதற்கு மட்டில் பயன்படுகிறதே ஒழிய பொருளைக் காண்பதும் பொருளின் தன்மையை உணர்வதும் கண்ணாடியல்ல. அஃதேபோல் மற்ற ஒவ்வொரு உறுப்புகளும் அதனதன் வழியாக புலனாகின்ற ஒவ்வொன்றும் உடலினுள்ளே உள்ள மனத்தில் போய் சேருகின்றதே தவிர அதனதன் தன்மையை அவ்வவ்வுறுப்புக்கள் அறியமாட்டா.

உடலானது நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும்பொருட்களால் ஆக்கப்பட்டிருந்த போதிலும் ஐம்பெரும்பொருட்களின் சேர்க்கையாக இருந்தபோதிலும் உடலுக்கு அறிவோ அறிவாலேற்படும் உணர்வோ இருக்கவோ அல்லது உண்டாகவோ முடியாதென்பது ஒருதலை. முன் இயல்களிலே தனித்தனியாக எந்த ஒரு பெரும் பொருளுக்கும் அறியுந்தன்மை இல்லையென்பதைக் கண்டோம் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒரு நிகழ்ச்சி ஏற்படும்பொழுதும் ஆராய்ந்தோம். எனவே அறிவற்ற பொருட்கள் எத்தனை ஒன்று சேர்ந்தாலும் அல்லது எத்தனையைக்கொண்டு என்ன அமைந்தாலும் அல்லது அமைக்கப்பட்டாலும் அப்படி அமைந்த அல்லது அமைக்கப் பட்ட பொருளுக்கு எவ்வாற்றானும் எக்காரணத்தை முன்னிட்டும் சிறிதேனும் அறிவு வராது. ஆகவே ஐம்பெரும்பொருட்களால் ஆக்கப்பட்டுள்ள

உடலுக்கும் அறிவோ அறிவாலேற்படும் உணர்வோ இருக்கமுடியாதென்பது தெள்ளிதின் விளங்குகிறது.

ஒரு வீட்டினுள் உள்ள மனிதன் வீட்டை தன் செயல்களுக்கு பயன்படுத்திக்கொள்கிறான் ஆனல் அவ்வீடு, வீட்டினுள் இருக்கும் மனிதன் புரிகின்ற எச்செயலைப்பற்றியும் அறியக்கூடிய அறிவுடைய பொருளல்ல. வீட்டிலேயே ஏதாவது மாறுதல் செய்து திருத்தியமைத்தாலும் அதுபற்றியும் அவ் வீடானது யாதொன்றும் அறிந்துகொள்ளக்கூடிய நிலையிலில்லை. அதுபோலவே உடலினுள்ளே இருந்துவரும் அறிவுடைப் பொருளாகிய உயிர் உடலை கருவியாக பயன்படுத்திக்கொண்டு செயல் புரிந்து வருகின்றதேயொழிய அவ்வாறு அறிவுடைப் பொருளின்றி உடல் தானே எதையும் அறிந்து செயலாற்றும் முறையில் இல்லையென்பது நன்கு புலனுகின்றது. இதுபோன்று பல எடுத்துக்காட்டு களின் மூலம் உடலின் நிலையை விளக்கியும் வலி யுறுத்தியும் கூறலாம். ஆயினும் விரிப்பிற்கஞ்சி விடுக்கின்றோம்.

## உயிர்

உயிர் என்பது அறிவோடு கூடிய ஒரு பொருள் உயிருக்கு எவ்வித நிறமோ, குறியோ, குணமோ, உருவமோ, பெயரோ இல்லை. அதனுடைய இயல்பு என்னவென்று உற்றுநோக்குங்கால் அது எந்த பொருளினின்றும் தோன்றியதுமல்ல. யாதாம் ஒரு வரால் தோற்றுவிக்கப்பட்டதுமல்ல. இது எவ்வா றெனின் விளக்குவாம்.

முன் இயல்களிலே கூறப்பட்ட நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும்பொருட் களும் அறிவற்றவையானபடியினலே அவைகளின்

சேர்க்கையால் உயிர் உண்டாயிற்று என்று கருது வதாயிருந்தால் அவ்வுயிர் அறிவும் உணர்ச்சியும் அற்றதாய் இருத்தல் வேண்டும். ஆனல் உயிர் அறிவுடைப் பொருளாக இருப்பதால் அது அறிவற்ற பொருட்களிலிருந்தோ அல்லது அத்தகைய பொருட்களின் சேர்க்கையாலோ தோன்றியிருக்க முடியாதென்பது ஒருதலை. சிலர் உண்ணப்படுகிற உணவிலிருந்து அறியுந் தன்மையுடைய ஒரு நிலை எற்படுவதாகக் கருதுகின்றனர். அதுவும் பொருந் தாக்கருத்தேயாகும். என்னையெனின் உண்ணப் படுகின்ற எந்தப் பொருட்கும் அறியுந்தன்மை இல்லை. உணவு உண்டபின் உடலிலே குருதியாக மாற்றப்பட்டுவிடுகிறது. அக்குருதிக்கும் அறிவில்லை குருதி உடலாக்கத்திற்கு மட்டில் தேவைப்படுகிறது. அஃதன்றியும் உடலினுள்ளே காணப்படுகின்ற பல் வேறு உறுப்புகளுக்கும் பொருட்களுக்கும் அறியுந்தன்மையில்லை. ஏனெனில் அந்த உறுப்புகளும் பொருட்களும் ஐம்பெரும்பொருட்களின் சேர்க்கை யாகும். ஆகவே உயிர்த்தன்மையானது உணவி லிருந்து உண்டாகக்கூடியதல்ல.

சிலர் உடலினுள்ளே உயிர் என்பதாக ஒரு தனிப்பொருள் இல்லையென்றும் உணவு உட்கொள் வதாலும் உடலினுள்ளே உள்ள சில அமைப்பு களாலும் அறிவாற்றல் ஏற்படுகின்றது என்று கூறுவர். மேற்கூறியவற்ருல் அக்கூற்று பொருந் தாதென்று விடுக்கின்ரேம். அறிவியல் அறிஞர் களால் ஆக்கப்பட்ட எந்த பொறியும் இயக்கப்படு வதற்கு எண்ணை முதலிய பொருட்கள், மின்சார ஆற்றல் இவைகளெல்லாம் பொறி இயங்குவதற்கு மட்டில் தேவைப்படுகிறதேயொழிய அவைகளே பொறிகளை இயக்குவதற்கில்லை. அவைகளை பொறி யில் சேர்த்து இயக்குவது அறிவுடை ஒரு மனிதனே

அவ்வாறே உணவு மற்றவை உடலாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவைப்படுகிறதே தவிர உடலின் இயக்கத்திற்கு அவைகள் காரணமல்ல. அறிவுடைப் பொருளாகிய உயிர் உடலினுள்ளே இருந்து உடலை கருவியாகக்கொண்டு செயலாற்றி வருகிறதென்பது உய்த்துணரக்கிடக்கின்றது. ஆகவே மேற்கூறிய வாறு ஐம்பெரும்பொருட்களின் சேர்க்கையினல் ஏற்பட்ட உடலிலோ உடலின் உள்ளே உள்ள அமைப்புகளிலோ உணவின் சேர்க்கையால் உட லுக்கு அறியும் அறிவு உண்டாவதற்கில்லை உடலின் உள்ளே அறியும் தன்மையோடு கூடிய ஒரு பொருள் உண்டாவதற்கும் இல்லை.

சிலர் காற்றை அறிவுடைப் பொருளாகவும் காற்ருல் உடல் இயங்கிக்கொண்டிருக்கிறதென்றும் எண்ணுகிருர்கள். ஆனல் அறியுந்தன்மையற்ற ஐம்பெரும்பொருட்களில் ஒன்ருகிய காற்று உடலி னுள்ளே செல்வதாலோ இருப்பதாலோ அறியுந் தன்மையுடையதாக ஆகமாட்டாது. உடலினுள்ளே எந்த அமைப்புடனும் காற்று சேர்ந்தாலும் அறி வுடைப் பொருளாக மாறுவதற்கில்லை. மேலும் காற்ருனது உடலினுள்ளே உள்ள தூய்மையற்ற குருதியை தூய்மையான குருதியாக மட்டுமே மாற்று கிறது. ஆகவே எந்த அறிவுடைச்செயலை நிகழ்த்து வதற்கும் காற்று காரணமாய் இல்லை.

உயிரானது அறிவோடு கூடியதாகவும் தோற்ற வொடுக்கம் அற்றதாகவும் இருக்கின்றது. உடல் தோன்றுகிறது, இருந்து மறைகிறது. அல்லது எந்த பொருட்களினின்றும் உடல் தோன்றுகின் றதோ அந்த பொருட்களுக்குள்ளேயே உடல் அழிந்துவிடும்பொழுது பிரிந்து ஒடுங்கிவிடுகிறது. உயிர் அறிவுடைப் பொருளாய் இருப்பதாலும்

அது தோன்றுவதற்கு மூலப்பொருள் இல்லையாதலாலும் அது மூக்காலத்திலும் உள்ளது என்று உணரற்பாற்று.

மேலும் உயிரானது எதிலிருந்தாவது உண்டாயிற்று, அல்லது உண்டாக்கப்பட்டது என்று கொள்வதாயிருந்தால் எதிலிருந்து தோன்றிற்று? அல்லது எந்தப்பொருளால் தோற்றுவிக்கப்பட்டது தோன்றிய அல்லது தோற்றுவிக்கப்பட்ட காரணம் என்ன? தோன்றிய அல்லது தோற்றுவிக்கப்பட்ட காலம் எது? என்ற இன்னோரன்ன பிற வினாக்கள் எழும்.

உயிர் தோன்றிய பொருளாக இருக்குமேயாமாகில் தோன்றியதற்கு காரணமாக உள்ள மூலப்பொருள் அறிவற்ற பொருளாயிருந்தால் உயிரும் அறிவற்றதாய் திகழவேண்டும். மூலப்பொருள் அறிவுடைப்பொருளாக இருந்தால் அதனின்றும் உயிர் தோன்றியதற்கு காரணம் வேண்டும். அஃதன்றியும் தோன்றிய காலம் உளதேல், இல்லாது போகும் காலம் ஏற்படும். ஆனதால் எந்த பொருளினின்றும் உயிரானது தோன்றியதும் தோற்றுவிக்கப்பட்டதுமல்ல என்று உய்த்துணர்க.

ஒரு பொருளால் உயிர் தோற்றுவிக்கப்பட்டிருக்குமாகில் அப்பொருள் உயிரைத் தோற்றுவித்ததற்கு காரணம் வேண்டும், அன்றியும் எதனின்றும் தோற்றுவிக்கப்பட்டது என்ற வினாவுக்கு மறுமொழி வேண்டும். தோற்றுவித்த பொருளுக்கு தோற்றுவிக்கப்பட்ட பொருளினால் என்ன பயன் என்ற வினாவுக்கு பதில் வேண்டும்.

உயிர்கள் தோன்றிய அல்லது தோற்றுவிக்கப் பட்ட காலம் இருக்குமேயாமாகில் அதற்கு முன் உயிர்கள் ஏன் தோற்றுவிக்கப்படவில்லை என்ற கேள்வி எழும். அதல்லாமலும் தோன்றிய எந்தப் பொருளும் மறையுமாதலால் உயிர்களே இல்லாது போகும் நிலை ஏற்படும். உயிர்கள் எக்காலத்திலும் உள்ளனவாகையால் இக்கூற்றெல்லாம் பொருந் தாக் கூற்றாக முடியும் என்று அறைக.

உயிர் நுட்பமான பொருள். உடலிலே உள்ள புறக்கண்ணால் பார்க்கப்படக் கூடியதல்ல உயிரா னது சார்ந்த உடலிலே உடலளவுக்கு உயிரின் தன்மை நிறைந்திருக்கிறது. உயிர் அறிவுடைப் பொரு ளாக இருப்பினும் கற்றல் கேட்டலால் தன்னறிவை பெருக்கிக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. உயிரானது உடலாகிய கருவியின்றி எச் செயலையும் செய்யக் கூடிய தன்மையுடையதல்ல. உடல் இல்லாத காலத்தில் யாதொரு செயலும் செய்ய இயலாது வாளாகக்கிடக்கின்றது கருவியாகிய உடலைச்சார்ந்த பொழுது பலஅரிய செயல்களை ஆற்றிவருகின்றது.

தான் உயிரென்பதை ஒருவன் நேரில் கண் டறியா விட்டாலும் உயிராகிய தன்னை மட்டிலாவது காப்பாற்றிக்கொள்ள எவ்வாற்றானும் முயல்கிறான் என்பதை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கு வாம், ஒரு வீட்டிலே இரவில் தூங்கும்போது நெருப் புப்பிடித்துக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். உறக்கத்தினின்றும் எழுந்த இல்லுக்குடையான் முதலிலே வீட்டிலுள்ள தாய், தந்தை, மனைவி, மக்கள் அனைவருடனும் தானும் தப்பி வெளியேற எத்தனிக்கிறான். தீ வேகமாக பற்றி எரிகிறது. அதை கவனிக்க மூப்படைந்த தாய் தந்தையரை வெளியே இட்டுச்செல்ல முடியாதென்று கருதி

மனைவி மக்களுடன் தான் வெளியே செல்ல முடியுமா என்று எண்ணிப்பார்க்கிறான். தீயின் வேகம் அதிகமாவதைக் காண்கிறான். காண்டலும் மக்களை விட்டு மனைவியுடன் மட்டிலாவது எப்படியும் தப்பி வெளியிலே சென்றுவிடுவோம் என்று கருதுகிறான் முதல் எண்ணத்தை மாற்றிக்கொண்டது தாய் தந்தையர் கிழவர்கள்தானே என்ற எண்ணத்தில். இரண்டாவது எண்ணத்தை மாற்றிக்கொண்டது மனைவி மட்டில் இருந்தால் பிறகு மக்களை பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் கடைசியாக தீ அதிவேகமாக முன்னேறுவதைக் கண்டு மனைவியை மட்டில் கூட வெளியே இட்டுச்செல்ல முடியாதென்னும் நிலையில் தான் மட்டிலாவது தப்பி ஓடி பிழைத்துக்கொண்டால் அடையலாம் வேறொரு இல்லாளை திருமணத்தின் மூலம் என எண்ணுகிறான் தீ இன்னும் தீவிரமாக எரியக்கண்டவன் உடனே விரைந்து ஓட்டின்மேல் ஏறி தாண்டிக் குதித்து சிறுகாயங்களுடன் தப்பி ஓடுகிறான். இந்த நிலையை ஆராயுங்கால் உலக வாழ்க்கையிலே ஒவ்வொருவனும் இடுக்கண் நேரிடும்பொழுது, இறுதியிலே, உயிராகிய தன்னைத் தான் நேரில் கண்டறியாவிட்டாலும் உயிராகிய தன்னை காப்பாற்றிக்கொள்ள முயல்கிறான். இதிலிருந்து உயிரின் அருமையும் அதைக்காப்பாற்றிக்கொள்வதற்கு அவனவன் படும் அரும்பாடும் நன்கு புலனாகிறது. அடுத்துவரும் இயலிலே உயிரினுடைய அரிய தன்மையை விரிவாகக் காணலாம்.

## உயிரும் உடலும்

முன் இரண்டு இயல்களிலே தனித்தனியாக உடலின் தன்மையையும் உயிரின் தன்மையையும் ஓரளவுக்கு ஆராய்ந்தோம். உடலும் உயிரும் சேர்ந்து நின்று இயங்குவதையே வாழ்க்கையாக

காண்கிறோம். உடலுடன் உயிர் சேர்ந்திருக்கும் பொழுதுதான் மனிதன் என்ற பெயருக்குள்ளா கிறது. உயிரின்றி தனியாக உடல் எந்த செயலையும் புரிய முடியாது, எதையும் அறியமுடியாது, தனித்து இருக்கவும் முடியாது. உயிர் நீங்கிய பிறகு உடலை சவமாகக் காண்கிறோமே ஒழிய மற்றெவ்வகையிலும் உடலை மட்டில் தனியாக காண்பதற்கில்லை. தாயின் கருப்பையில்கூட உயிர் சேராவிட்டால் உடல் உண் டாகவோ வளரவோ முடியாதென்பது அறிந்த தொன்றேயாகும். குழந்தையாக பிறந்த பின்பும் உயிராம் பொருள் உடலில் தங்கி இல்லையேல் குழந்தை வளர்ச்சி யடையவோ வளர்ந்து குழந்தைப் பருவம் தாண்டி மனித நிலையடையவோ முடியாது. உயிர் தோற்ற ஒடுக்கமற்று என்றும் உள்ளது. உடல் தோன்றி இருந்து மறைவது. தோன்றி மறையும் தன்மையுடைத்தெனினும் பல்வேறு நாட் டிலுள்ள அறிவியல் வல்லுநர்கள் எவராலும் உடலை செயற்கையாக அமைக்கமுடியாது. முழு உடலை இல்லாவிட்டாலும் உடலிலே கை, கால் போன்ற ஏதாவது ஒரு உறுப்பையாவது செய்ய இயலுமா என்றாலோ முடியாதென்றே கூறுதும். ஏன் இய லாதென்று வினவின் உடலானது இயற்கையாக அமைகின்றது. உடலிலே பல அரிய நிலைகளைக் காண்கிறோம். உடல் உயிருக்கு மிக உயர்ந்த முறை களிலே அரண் செய்து நிற்கின்றது. உடலிலே காணப்படும் பல அரிய அமைப்புகளுடன் கூடிய தாக ஓர் உடலை எவராலும் ஐம்பெரும்பொருட்களி னாலேயோ உலகிலே காணப்படும் மற்றெவ்வகைப் பொருட்களினாலேயோ செயற்கையாக அமைக்க முடியாதென்பது உறுதி. அத்தகைய அரிய நிலை யில் மிக அரும்பெரும் செயல்களுக்கு பயன்படக் கூடிய உடல் அறிவுடைப்பொருளாம் உயிரின் கூட்டுறவின்றி யாதொன்றும் செய்வதற்கில்லை என்பதை முன்னரே கண்டோம்.

உயிரானது அறிவுடைப் பொருளாயிருந்தும் தோற்ற ஒடுக்கமற்று எக்காலத்தும் உள்ளதாகிய சிறப்புத்தன்மை பொருந்திய பொருளாயிருந்தும், உடலின்றி யாதும் செய்ய முடியாத நிலையில் உள்ளதாக இருக்கிறது. இருந்தபோதிலும் சிறப்பு உயிருக்கேயன்றி உடலுக்கில்லை என்பது காணும் கருத்தாகும். எது எவ்வாறுளதெனினும் மனிதன் தன் உடலை நோயின்றியும், நிலையாமை, மூப்புக்கு உட்படாமலும் காப்பாற்றவேண்டியது மிக இன்றியமையாத கடமையாக இருக்கின்றது. ஏனென்றால் உடலின்றி உயிர் எச்செயலையும் ஆற்றமுடியாமல் நிற்பதால்தான்.

ஆற்றைக்கடக்கவேண்டிய ஒருவனுக்கு படகு எப்படி இன்றியமையாது வேண்டற்பாலதோ அது போன்றே தனக்கு வேண்டிய செயல்களைக்கவனிப்பதற்கும் தனக்கு வேண்டிய அரியபெரிய இன்பங்களை அடைந்து துய்க்கவும் உடல் வேண்டற்பாலதே செம்மையான வழியில் நின்று வாழ்க்கையை நடத்தினல் உடலை மூப்புக்கும் மரணத்திற்கும் உட்படாதபடி தடுக்கலாம். அத்தகைய நிலையில் வாழ்வதே மனிதப்பிறவியின் அரும்பெரும் நோக்கமாக ஒவ்வொருவருக்கும் இருத்தல்வேண்டும். உடலில் உயிர் இல்லை என்று சிலர் கூறுவதால் அக்கூற்று உண்மையின்பாற்படுகிறதா என்பதை சில முறையில் ஆராய்வோம். உடலிலே அறிவு நிகழ்ச்சியோடு கூடிய உயிரெனும் பொருள் இல்லையேல் உறக்கம், விழிப்பு, கனவு, மயக்கம், நோய், துன்பம், இன்பம் ஆகிய இவைகள் உடலை எப்படிச்சாரும் என்பதை நன்கு ஆராயவேண்டியிருக்கிறது.

உறக்கம் என்பது ஓய்வென்று கொள்ளப்படுகிறது அறிவுடைப் பொருளாகிய உயிர் இல்லையேல்

உடல் மட்டில் பணியாற்றுவதற்கு இல்லை. அதற்கு ஓய்வும் தேவையில்லை. அதாவது பலர் பகற்காலங்களிலே பலமணி நேரங்கள் மனிதன் பல அலுவல்களில் இடுபட்டு உழைப்பதால் கருவி கரணங்களுக்கு ஓய்வு தேவை என்றாலும் உயிர் உடலிலே இருப்பதினால்தான் மேற்கூறிய உறுப்புகளுக்கும், உடலுக்கும் ஓய்வு தேவைப்படுகிறது. வெறும் உடல் உறங்குவதில்லை. உறக்கத்திற்குப் பின்னர் விழிப்பதுமில்லை. உறங்குங்காலத்தில் உயிரானது உடலைவிட்டு பிரிந்து போகுமேல் காலையிலே விழிப்பிற்கு இடமில்லை. உடலை சவமாகத்தான் காண முடியும்.

உடலினுள் உயிர் இருப்பதினால்தான் கனவு என்ற நிலை உறக்கத்திலே காணப்படுகிறது. கனவு என்பது உறக்கத்திலிருக்கும்பொழுது உடலின் உள்ளே உள்ள புற உறுப்புக்கள் யாதொரு செயலிலும் ஈடுபடவில்லை என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் உடலினுள்ளே உள்ள உயிருக்கு தன் வாழ்நாளிலே எப்பொழுதாவது நினைத்த சில எண்ணங்கள் அல்லது வருங்காலத்தில் செய்யவேண்டும் என நினைத்த சில செயல்கள் போன்றவைகள் கனவில் தோற்றமளிக்கின்றன அங்கே கருவி கரணங்களும் உடலும் உறக்கத்தில் ஓய்ந்திருக்கும்பொழுது உடலினுள்ளே உள்ள அறிவுடைப் பொருளாம் உயிரே பல நிகழ்ச்சிகளை எதிர்ப்பட்டு அறிவதுபோல் காண்கின்றது. எனவே இதனைக்கொண்டும் உடம்பிலே உயிர் இருக்கின்றதென்பது நன்கு அறியற்பாலதாமென்றுணர்க.

பகற்காலத்திலே திடீரென்று மயக்கம் வந்து அதற்குட்படும்பொழுது சிறிது நேரம் மனிதன் உணர்வற்று அறியுஞ்செயலற்று கிடக்கிருன்.

மயக்கம் தெளிந்தவுடன் மீண்டும் மனிதன் உணர்வு நிலைக்கு வருகிறான். ஈண்டும் வெறும் உடலுக்கு மயக்கம் வருதலோ, மயக்கத்தில் சிறிது நேரம் ஆழ்ந்திருத்தலோ, பின்னர் மயக்கத்தினின்றும் மீளுதலோ பொருத்தமுடைத்தல்ல.

ஒரு மனிதன் நோய்வாய்ப்பட்டு துன்புறும் பொழுது அந்நோயினால் உடலிலே ஏற்படும் துன்பத்தை துய்ப்பது உயிர்ப் பொருளேயன்றி அறிவு உணர்ச்சி இல்லாத உடலல்ல. அவ்வாறே உடல் இன்புறும் நிகழ்ச்சியில் ஈடுபடும்பொழுது உடலின் மூலம் இன்பத்திலாழ்வது உயிரேயன்றி உடலல்ல.

மரணம் என்ற நிலையைப்பற்றி சிறிது ஆராய்வோம். ஏதோ ஓரோர் காலத்தில் யாதாமோரறிஞர் செம்மை வழியில் நின்று மரணத்திற்குட்படாத நிலையைப் பெற்றாரென்று வரலாறு மூலமறிகிறோம். அப்படிப்பட்ட மெய்யறிவாளிகள் தவிர மன்னர் முதல் பல நிலைகளில் உள்ளவர்களும் வாழ்க்கையினிறுதியிலே மரணத்திற்குட்படுவதைக் காண்கின்றோம். அந்த நிலையை ஆராய்ந்து பார்க்குங்கால் மரணம் என்பது மக்களால் கடத்தற்கரிய ஓர் பேரிடர் என்று அறிகிறோம். அப்பேரிடராம் மரணத்தைத் தாண்டிச்செல்லவும் செம்மையான முறை இருக்கின்றது. அம்முறை தெரிந்து பின்பற்றி அம்முறையின் முடிவைக்கண்டோர் மரணத்திற்கு உட்படாத நிலையைப் பெறுகின்றார். மற்றையவர்கள் மரணத்திற்கு உட்படுகிறார்கள். மரணம் என்றால் உடலைவிட்டு உயிர் பிரிதலையே குறிக்கிறது உடலினுள்ளே உயிர் தங்கி வாழ்க்கையிலிருப்பது ஏதோ ஒரு நாள் ஏன் பிரியவேண்டும்? அப்படி பிரியும் நாளை மனிதன் முன்கூட்டி ஏன் அறிய முடியவில்லை என்பனபோன்றவற்றை அடுத்து வரும்

இயலிலே ஆராய்வோம். உலக வாழ்க்கையிலே ஓர் இல்லத்திலே யாதாம் ஒருவர் தவறிப்போய்விட்டால் அவரைச்சார்ந்த மற்றையோர்கள் தவறியவரின் பிரிவாற்றாமையைப்பற்றி மிகக் கதறி அழுகின்றார்கள், துடிக்கின்றார்கள், பதைக்கின்றார்கள். அப்படி வருந்தியழுவதால் தவறியவர் உடலிலே முன்பு இருந்த உயிர் மீண்டும் வந்து புகுந்து அவர் மறுபடியும் வாழ்வைப்பெறுவதற்கில்லை அந்நிலையை அறிந்த மக்கள் ஏன் வாடி அழுகின்றனர் என்று பார்க்குங்கால் அறியாமையும் உண்மை உணராமையும் தெளிவில்லாமையுமே காரணமென்றறிக. இது பற்றி **இறந்தால் அழுவது ஏன்** என்னும் எமது நூலில் விரிவாகக்காண்க.

இறந்தவர் உடலிலுள்ள உயிர் வேறு, தான் வேறு உலக வாழ்க்கைத் தொடர்பில் ஒருவனுக்கொருவன் தந்தையாகவும் பிள்ளையாகவும் ஒருவனுக்கொருவன் அண்ணனாகவும் தம்பியாகவும் கொள்ளப்படுகிறான். ஆனால் இவ்வித தொடர்புகளெல்லாம் சில ஆண்டுகள் இருப்பதேயொழிய நிலைத்து நிற்பதில்லை. அஃதன்றியும் ஒருயிர்க்கும் மற்றோருயிர்க்கும் யாதொரு தொடர்பும் இல்லை. பிறப்பிற்கு முன்பும், இறந்த பின்னும் ஒருயிரின் நிலையை மற்றோருயிர் அறியவும் முடியாது. முன்பு உலக வாழ்க்கைத் தொடர்பில் இருந்த உயிர்கள் மீண்டும் தகப்பன் மகனென்ற முறையிலோ அண்ணன் தம்பி என்ற முறையிலோ சேர்வதற்கில்லை. இதுபற்றி கூர்ந்து பார்க்குங்கால் ஒவ்வோர் உடலினுள்ளும் தனித்தனியே ஓர் உயிர் இருக்கின்றதென்னும் பேருண்மை விளங்காநிற்கின்றது.

ஒருவன் தன் வீட்டிலுள்ள ஒருவனுக்கோ அல்லது ஒரு நட்பாளனுக்கோ நிழற்படமெடுத்து

வைத்துக்கொள்ளுகிறான். நிழற்படமானது தன்னால் விரும்பப்பட்ட நண்பனை நண்பனாகக்கொள்வதற்குரிய அந்நண்பன் உடலிலே உள்ள உயிரைப் பார்த்து எடுக்கப்பட்டதல்ல. உடலை புறக்கண்ணால் பார்க்கவும் படத்திலே பிடிக்கவும் ஒண்ணாது ஆனால் சிறப்பு உயிருக்குத்தான் கொடுக்கவேண்டும். நினைவும் உயிரைப்பற்றிதான் கொள்ள வேண்டும். முடியாமையால் தோன்றி மறையும் உடலுக்கு படம் எடுத்துவைக்கிறான். எனவே அறிவுடைப் பொருளாம் உயிரை மனித ஆற்றலினால் பார்க்கவோ, பார்த்து மகிழவோ இயலாது.

தன்னகத்தே உள்ள இன்பத்தை அறிந்து அடைய எண்ணாது பெரும்பாலானமக்கள் தனக்குப் புறம்பான பொருள்களில் இன்பம் இருப்பதாகக் கருதி அவைகளையே நாடிவாழ்நாளை கழிக்கின்றனர். நன்கு ஆராய்ந்தறிந்த அறிஞர்கள். உயிராகிய தன்னிடத்திலுள்ள இன்பத்தைப் பெற்று மகிழும் பொருட்டு அதற்குரிய செம்மையான வழியையறிந்து அவ்வழியில் நின்று தன்னைத்தான் கண்டு தன்னிடத்திலே உள்ள இன்பப் பேற்றினை அடைகின்றார்கள்.

உடலும் உயிரும் வேறு வேறு பொருட்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்குவோம். ஒரு இல்லுக்குடையான் தன் வீட்டிலிருந்து கொண்டு பல செயல்களைப்புரிகிறான். வீடு மனிதனுக்கு மழை, வெயிலில் துன்புறுமல் தங்கியிருக்கவும் உணவு தயாரித்து உண்ணவும் பின்னும் தேவையான பலவற்றிற்கும் பயன்படுகிறது. இங்கே வீடானது கருவியாகநின்று பயன்படுகிறதேயன்றி மனிதன் செய்யும் எதையும் தான் அறியவில்லை. மனிதன் வீட்டைப் பயன்படுத்திக்கொண்டு தன்

கடமைகளைச் செய்துவருவதுபோல உடலிலேயுள்ள உயிரும் உடலைக் கருவியாகக்கொண்டு தன் பணிகளை மேற்கொண்டு செய்துவருகிறது. ஆனால் உடலைக்கொண்டு உயிர் செய்துவருபவைகளைப் பற்றி உடல்யாதொன்றும் அறியமாட்டாது. எனவே உடலும் மனிதன் வாழ்கின்ற வீட்டைப் போலவே ஒரு வீடாக கொள்ளத்தக்கதாய் இருக்கின்றது. ஆனால் வீடு அசையாமல் ஓரிடத்தில் நிற்கின்றது. உடலோடு கூடிய உயிர் மனிதன் என்ற நிலையில் வீட்டைவிட்டு வெளியே சென்றுவரக்கூடியதாகவிருக்கின்றது. வீட்டிலுள்ளான் ஒருவன் தன் பணியைக்கருதி வெளியே சென்று வீட்டிற்கு மீண்டும் வருகின்றான். அதுபோன்றே ஓர் உடலில் தங்கி வாழ்கின்ற உயிர் அவ்வுடலிலே தான் இருக்க வேண்டிய கால அளவு முடியுங்கால் உடலைவிட்டு உயிர் பிரியும்படி நேரிடுகிறது. அவ்வாறு உடலை விட்டு பிரிந்த உயிர் வேறு உடலைச்சார்கின்றது. ஒருவீட்டில் குடியிருக்கும் ஒருவன் தந்நலம் கருதி அவ்வீட்டைவிட்டு வேறு வீட்டிற்கு குடிபோய் தங்குகிறான். அதுபோன்றே ஓர் உடலைச் சேர்ந்து வாழ்ந்து வருகின்ற உயிர் கால அளவு முடிந்ததும் அதனின்றும் பிரிந்து மற்றோர் உடலுக்கு சென்று சேர்கின்றது. இதுகாறும் கூறியவற்றால் பொருள் தன்மையில் பார்க்கும்பொழுது வீடு வேறு மனிதன் வேறு என்றுணர்வதுபோல உயிர் வேறு உடல் வேறு என்றுணர இடங்கொடுக்கிறது. வீடு போன்று உடலும் அறிவற்ற பொருளே.

பேய்களாம் நிலை பெற்ற உயிர்கள் இவ்வுடலின்றி அலைந்து திரிவதுடன்சில செயல்களையும் புரிந்து வருகின்றமையால் உயிரென்பது உடலினின்றும் வேறாய் அறிவுடைப்பொருளாய் உடலில் தங்கி உடலைத் தனக்குக் கருவியாகப் பயன்படுத்

திக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறதென்பது செம்மையாய் ஆராய்வோர்க்கு புலனுகாமற்போகா.

## மூலப்பொருள் அல்லது கடவுள்.

முன் இயல்களிலே தனித்தனியாக உடலின் தன்மையைப்பற்றியும் உயிரின் தன்மையைப்பற்றியும் விரிவாக ஆராய்ந்தோம். உடலானது அறிவற்ற பொருள் என்றும் உயிரின்றி அதற்கு யாதொரு சிறப்பில்லை யென்றும் பெறப்பட்டது. உயிரானது அறிவுடைப்பொருளாய் இருந்தும் உடலின்றி யாதொன்றும் செய்வதற்கில்லை என்பதையும் கண்டோம் இவ்விரண்டு பொருளின் நிலையும் இவ்வாறிருக்கும்போது உடலும் உயிரும் எப்படி சேர்ந்தது என்று ஆராயவேண்டியிருக்கிறது. உடல் அறிவற்ற பொருளானமையால் உயிரை தன்னிடத்தில் வந்து சேரும்படி செய்ய அதற்கு இயல்பில்லை. உயிர் அறிவுடைப் பொருளாய் இருந்தும் கருவியாகிய உடலின்றியாதொன்றும் எண்ணவோ செய்யவோ இயலாத நிலைமையில் உள்ளதானதால் தானுகவே உயிரானது உடலிலே சென்று சேருவதற்கும் இடமில்லை. ஆனமையால் உடலும் உயிரும் ஒன்று சேர்வதற்கு காரணமாக ஆற்றலும் அறிவும் கொண்டதாக ஒரு மூலப்பொருள் இருந்தே தீரவேண்டும். அவ்வாறு ஏதாவது மூலப்பொருள் உண்டா என்று ஆராயும்பொழுது **கடவுள்** என்ற ஒரு தனிப்பெரும் முழுமுதற்பொருள் உளதென்பது நன்கு புலனுகிறது.

சிலர் மூலப்பொருள் உண்டு என்பதையும் அது ஒரு ஆற்றலோடு கூடியது என்றும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனல் காற்றைப்போல் ஏதோ ஒருவிதமாக ஒருபொருள் இருக்கலாம். ஆனல் அப்பொருள்

அறிவோடு கூடியது என்று எண்ண இடமில்லை என்று வாதாடுகிறார்கள். உலகத்திலே நிகழ்கின்ற பல நிகழ்ச்சிகளையும் பலதிறப்பட்ட காட்சிகளையும் கண்டு அதன் தன்மைகளையும் காரணங்களையும் ஆழ்ந்து நோக்குங்கால் மூலப்பொருளாம் கடவுள் ஆற்றலுடன் மட்டிலல்ல, திண்ணமாக அறிவுடனும் கூடியதென்பது புலனாகிறது. உலகிலே உயிர்கள் நாள் தோறும் பிறத்தலைக் காண்கிறோம். பிறந்த உயிர்கள் வாழ்க்கையிலிருப்பதைக் காண்கிறோம். அவ்வாறே நாள்தோறும் பல உயிர்கள் உடலினின்றும் பிரிந்து மரணத்திற்குள்ளாவதையும் காண்கிறோம்.

ஒவ்வொரு உயிர்க்கும் உலகிலே வாழ்கின்ற கால அளவு ஒரு அளவாக இருப்பதில்லை. ஒரு உயிரின் வாழ்க்கையின் கால அளவு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராயுங்கால் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு உடலுடன் சேர்க்கப்படும் பொழுதே அதனுடைய வாழ்க்கையின் கால அளவு இத்தனை மூச்சுகளைக்கொண்டது என்று கணிக்கப் பட்டுவிடுகின்றது.

எனவே ஒரு உயிர் தனக்குக் கணிக்கப்பட்ட மூச்சுகளின் எண்ணிக்கையை செலவழித்ததின் பின்னர் ஒரு கணங்கூட உடலிலே தங்கியிருக்க முடியாதென்பது மறுக்கமுடியாத உண்மை. ஒரு மனிதன் கணக்குமுறைப்படி ஒரு நாளைக்கு செல வழிக்கவேண்டிய மூச்சுகளின் எண்ணிக்கை 21600 ஆனால் ஒரு மனிதன் செலவழிப்பதைவிட மற்றொரு மனிதன் மேற்சொல்லப்பட்ட கணக்கிற்கு மேலும் செலவழிக்கிறான். ஒருவன் அதிகமாக செலவழிக் கும்படி நேரிடுவதற்குக் காரணம் அவன் மேற் கொண்டிருக்கும் அலுவல்கள் அல்லது அவன் உறங்குவதுபோன்ற செயல்களில் ஈடுபடும்

நேரத்தைப் பொறுத்தது: நடப்பது, உரையாடுவது, ஏற்றம் இறைப்பதுபோன்ற கடினவேலைகள் செய்வது ஓடுவது, உறங்குவது, உலக இன்பங்களில் வரன் முறையின்றி இடுபடுவது ஆகிய செயல்களில் இடுபடுவதைப்பொறுத்தது மூச்சுகள் செலவாகும் எண்ணிக்கை. இச்செயல்களில் மற்றவைகளைக்காட்டிலும் உறங்கும்பொழுதுதான் அதிக மூச்சுகள் செலவழிகின்றன. ஆக ஒருவனுக்கு மூச்சின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு எவ்வாறு செலவழிந்தாலும் மொத்தத்தில் அவனுக்கு கணிக்கப்பட்ட மூச்சுகளின் எண்ணிக்கை முடிவடைந்த உடன் உடலினின்றும் உயிர் பிரிந்தே தீரும்.

ஓர் உடலிலே உயிர் சேர்க்கப்படும்பொழுது அதனுடைய கால அளவை மூச்சுகளால் கணிப்பது யார் அதற்கென்ன காரணம் என்று ஆராயும் பொழுது மூலப்பொருளாம் கடவுள் அறிவுடைப் பொருளே என்று தெற்றென விளங்குகின்றது. ஓர் பிறவியிலே ஓர் உயிர் புரியும் நல்வினை தீவினையைக்கொண்டு அந்த உயிர் மறுபிறவியை அடைய வேண்டியதைப் பற்றியும் மறுபிறவியின் வாழ்க்கைக்கு கால அளவையும் மற்றவைகளையும் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. எனவே ஓர் உயிர் ஒரு பிறவியிலே செய்த வினைகளின் தன்மையையும் அளவையும் அறிந்து அதற்கு ஏற்ப அவ்வுயிருக்கு மறு பிறவியும் மறு பிறவியின் வாழ்க்கைக்கால அளவையும் நிர்ணயிப்பதால் மூலப்பொருளாம் கடவுள் எவ்வாற்றானும் நிறைந்த அறிவும் ஆற்றலும் உள்ள பொருள் என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கிறது.

ஓர் உயிர் தனக்கு அளிக்கப்பட்ட மூச்சுகளை செலவழித்த பின்னர் ஒரு கணங்கூட உயிர்

மேற்கொண்டு உடலில் தங்கமுடியாது போவதற்கும் சிலமூச்சுகள் மிச்சம் இருக்கும்பொழுதே அவ்வுயிர் உடலை விட்டு பிரியாமல் இருப்பதற்கும் காரணம் என்னவென்று கவனிப்போம் முன்னர் கூறியபடி அறிவுடைப்பொருளாம் கடவுள் ஒவ்வொரு உயிர்க்கும் வகுத்துக் கொடுக்கப்பட்ட மூச்சுகள் அனைத்தும் செலவழிக்கப்படுவதற்கு முன்பாக உயிர் உடலினின்றும் பிரியமுடியாமல் இருப்பதற்கும் மூச்சுகள் பூராவும் செலவழிந்த உடன் உடலைவிட்டு உயிர் பிரிவதற்கும் காரணமாக நிற்கிறது.

உலக வாழ்க்கையின் இறுதியிலே மனிதன் மரணத்திற்குட்படுகிறான். மரணத்திற்குட்படாது தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு வழி உண்டு. அவ்வழிப்படி செம்மையான முறையில் நின்று மனத்தையடக்கி மூலப்பொருளாம் கடவுளைக் குறிக்கோளாகக்கொண்டு மனனம் செய்து வந்தால் மரணத்தை ஒருவன் தடுத்து நிற்க இயலும். அவ்வாறு தன்னைக்குறித்து தவம் செய்வார்க்கு மூலப்பொருளாம் கடவுள் தவமியற்றும் ஒருவனின் தன்மையையறிந்து தவத்தில் தலைப்படும்பொழுது மரணத்திற்குட்படா நிலையை அவனுக்கு அளிக்கிறது. தவம் புரிபவர் தான் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் பொருள் அறிவுத்திறன் அற்றதாய் இருந்தால் தவத்தின் அளவு தெரிந்து அவனுக்கு அருள் பாலிக்க அதனால் இயலாது போய்விடும்.

மேலை நாடுகளில் அறிவியல் அறிஞர்களால் அறிந்து கையாளப்படும் (Mesmerisum) மனத்தையும் பார்வையையும் ஒர்முகப்படுத்தும் வழியிற் சென்று மனோ ஆற்றல் பெற்ற ஒருவன் மற்றொருவனுக்குள்ள நோயைத் தீர்க்கும் வலிமை பெற்று நிற்பதைக் காண்கிறோம். இங்கே குறிக்கோளாகக்

கொள்ளும் பொருள் அறிவற்ற, இதற்கென செயற் கையாக உண்டுபண்ணப்பட்ட தட்டு முதலியவை களாகும். இதிலிருந்து நாமறிவது என்னவெனின் மனத்தை ஓர்முகப்படுத்த குறிக்கோளாகக்கொள் ளப்படும்பொருட்கள் அறிவற்ற பொருளாயிருந்தும் மனதுக்கும் கண்ணுக்கும் ஓரளவு வலிமையுண் டாகிறது என்றால் அம்முறை விடுத்து அறிவும் ஆற் றலும் நிறைந்த எல்லாவற்றிற்கும் மூலப்பொருளாம் கடவுளைக் குறிக்கோளாகக்கொண்டு மனத்தை ஒருமையுளதாக்கி வழிபாடு இயற்றினல் எண்ணுதற் கரிய ஆற்றல், அறிவு முதலியவற்றை உயிரானது ஒருங்கே எய்தப்பெறும் என்பதில் யாதொரு ஐயப் பாடுமில்லை.

உலகிலே மக்களும் மற்ற உயிரினங்களும் முதன்முதலிலே தோன்றுவதற்கு யாது காரணம் என ஆராயப்புகின் அதற்கு மூலகாரணம் ஆகிய கடவுள் என்னும் பொருளால்தான் என்பது உணரக்கிடக்கின்றது. ஓர் ஆண் பெண் கூட்டுற வின்றி மற்றோர் ஆணோ பெண்ணோ தோன்றுதல் இயலாது. அஃதேபோன்று ஒவ்வோர் உயிரினத் திற்கும் கொள்க. மரம் போன்றவைகளுக்குக்கூட முன்னர் வித்தோ அல்லது மரமோ தேவைப்படு கின்றது. தோற்ற காலத்திலே எதுவும் தானுகவே உண்டாக முடியாது, ஆனதால் முதலில் மூலப் பொருளாம் கடவுளின் ஆற்றலால் மக்கள் தோற்று விக்கப்பட்டுள்ளனர் பின்னர் மக்களினின்று மக்கள் தோன்றுவதும் எண்ணிக்கை பெருகுவதும் இயற்கை. எனவே முதற்கண்ணதாக மக்களைத் தோற்றுவிப்பதற்கு கடவுள் என்ற பொருள் அறி வுடன் கூடியதாக தோற்ற ஒடுக்கம் அற்றதாக முக்காலத்திலும் உள்ளதாக இருந்தாலன்றி நிகழ் வதற்கில்லை என்பது ஆழ்ந்து சிந்திப்பதிலிருந்து ஏற்படக்கூடிய உண்மையாகும்.

## உலகமும் கடவுளும்.

முன் இயல்களிலே ஐம்பெரும்பொருட்களைப் பற்றியும் அவைகளின் தன்மையைப்பற்றியும் உடல் உயிர் ஆகியவைகளைப்பற்றியும் ஆராயப் பட்டது. இவ்வியலிலே கடவுளும் உலகமும் என்பதுபற்றி ஆராய்வோம். எங்கும் நிறைந்து எல்லாம் வல்லதாய் உள்ள அருட்பேரொளியாம் ஆண்டவன் எட்டுத் திசையும் பதினறு கோணமும் முட்டித் ததும்பி முளைத்தோங்கி நிற்கிருன். எல்லா உலகங் களிலேயும் எல்லா உலகங்களுக்கு மேலும் கீழும் அப்பாற்பட்டும் நீக்கமற நிறைந்து நிற்கின்றதப் பொருள். நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும்பொருட்களினுள்ளும் உலகில் காணப் படும் மற்றெல்லாப் பொருட்களினுள்ளும் ஊடுருவியும் கலந்தும் நிற்கின்றது அவ்விறை. இறைவனே ஐம்பெரும்பொருட்களோ அல்லது ஐம்பெரும் பொருட்களே இறைவனே என்றலோ இல்லை. எல்லாப்பொருட்களினிடத்தும் இறை தங்கியிருந் தாலும் அப்பொருட்களுடன் ஒன்ருயும், உடனுயும் வேருயும் நிற்கின்றது. பாலும் நீரும் கலந்து நிற் குங்கால் கலப்புத்தன்மையில் ஒரு பொருளாகக் காணப்படினும் பொருட்தன்மையில் பால் வேறு நீர் வேருகவே கொள்ளப்படுகிறது. அதுபோன்றே ஐம்பெரும்பொருட்களும் இறையும் கலப்புத் தன்மையில் ஒன்ருகக் காணப்படினும் பொருட் தன்மையால் வேருகவே கொள்ளப்படல் வேண்டும். அஃதன்றியும் எந்தப்பொருளும் இறையின் கூட்டுற வின்றி இயங்க முடியாதானமையான் அது எல் லாப்பொருட்களுக்கும் இயங்குவதற்கு காரண மாகவும் உடனுயும் நிற்கின்றது.

மேற்கூறியவற்றை ஓர் எடுத்துக்காட்டு மூலம் விளக்குவோம். ஊர்வழி நடந்துசெல்லும் ஒருவன் தான் செல்லுகின்ற பாதையில் தனக்கு சிறிது தூரத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் ஓர் மரத்தால் செய்யப்பட்ட யானையைக் காண்கிறான். தூரத்தில் கண்டதும் மரம் என்று உணரமுடியாத காரணத்தினாலே தென்பட்ட வடிவத்தைக்கொண்டு யானை வடிவத்தில் நிற்கும் மரத்தை உண்மையான யானையென்றே கொள்கிறான். சிறிது தூரம் சென்றவுடன் முன்னர் தென்பட்ட யானை அசைவற்று நிற்பதைக் காண்கிறான் கண்டவுடன் அது யானை தானா அல்லவா என்று ஐயங்கொள்கிறான். யானையாயிருந்தால் அசைவிருக்கும், தனக்கு எதிரிட்டு நடந்து வரும், துதிக்கையோ காதோ ஆட்டங் கொள்ளும். இவைகள் யாதொரு நிகழ்ச்சிகளும் காணாதபோது ஐயம் பின்னும் வலுப்படுகிறது. இன்னும் சிறிது தூரம் சென்றவுடன் சற்றும் அசைவற்றிருப்பதைக் கண்டு மரத்தால் செய்யப் பட்ட யானையோ என்று எண்ணுகிறான். இறுதியாக அருகிலே சென்று பார்த்தவுடன் அது உண்மையான யானையல்ல. மரத்தால் யானை போன்று செய்யப்பட்ட வடிவமே என்று அறிகிறான். அப்போது யானை என்று தூரத்தில் முதலில் கண்டபோது எண்ணிய எண்ணம் மாறி அது மரமே என்ற உண்மையை தெரிந்துகொள்ளுகிறான். இதனை உற்று நோக்குங்கால் மரமானது தூரப்பார்வையில் மரம் என்ற தன்மையை மறைத்து வடிவத்தால் யானை என்ற உணர்ச்சியை அவனுக்கு அளித்தது. அருகிற்சென்றதும் யானை என்று தவறாக அறிந்த நிலை மாறி யானைபோன்று மரத்தால் செய்யப்பட்ட மரமே என்ற உண்மையை அவனுக்கு உணர்த்திற்று.

அதுபோன்றே ஐம்பெரும் பொருட்களும் அவைகளினிடத்தே ஊடுருவியும் கலந்தும் நிற்கும் இறையை நினைக்கவோ உணரவோ முடியாது மக்களை மறைத்து நிற்கின்றது. எங்கும் நிறைந்ததாகவும் ஐம்பெரும்பொருட்களுக்கு உள்ளேயும் கலந்து நிற்கும் இறையைப்பற்றி செம்மையாக ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கின் அதனுடைய உண்மை ஒருவனுக்கு விளங்குகின்றது அவ்வாறு நன்குணர்ந்து இறையைப் பற்றிய எண்ணத்தில் தலைப்பட்டு நிற்கும்பொழுது முன்னர் அதனை மறைத்து நின்ற ஐம்பெரும்பொருட்களின் நினைவு அவனிடத்தில் அற்றுவிடுகின்றது. அதாவது நிலம் முதலாய ஐம்பெரும்பொருட்களின் சார்பு அவைகளினிடத்து கலந்து நிற்கும் இறையை மறைத்து நிற்பதும் இறையாம் பரத்தை ஆழ்ந்து உணர்ந்து எண்ணி அதன் சார்பாய் நிற்குங்கால் முன்னர் அதை மறைத்து நின்ற ஐம்பெரும்பொருட்களின் உணர்வு விலகிவிடுதலையும் அறிகின்றோம்.

உலகில் காணப்படும் மக்கள் விலங்குகள் பறவைகள் முதலிய உயிரினங்களினிடத்தும் இறையானது கலந்த வண்ணமாகவே இருக்கின்றது அவ்வாறே காணப்படும் அறிவுடைப்பொருள், அறிவற்றபொருள் எதுவும் இறையினுடைய கலப்பின்றி இல்லை. இருக்கவும் இயலாது. நிற்க.

இறையானது எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் பொருளாகவும், எல்லாப் பொருட்களும் தோன்றுவதற்கு முன்பும் எல்லாம் அழிக்கப்பட்ட பின்னும் நிலைத்து நிற்கும் பொருளாகவும் இருப்பது அதனுடைய ஒப்புயர்வற்ற தன்மையாகும். எனவே நிலம் முதலிய ஐம்பெரும்

பொருட்கள், ஐம்பெரும்பொருட்களால் ஆக்கப்படு பவைகள் ஆகிய எவைகளும் இறையல்ல. அவைகள் இறையாக ஆகவும் இயலாது. அன்றியும் இறை யிடத்திருந்து தோன்றியனவும் அல்ல. இறை ஐம் பெரும்பொருட்களாகவோ மற்றெந்த பொருட் களாகவோ ஆகவும் இயலாது. என்னையெனின் இறையானது தோற்ற ஒடுக்கமற்றதும் மாறுதலுக் குட்படாததும் பேரறிவோடு கூடியதும் இன்பநிலை கொண்டுள்ளதும் எல்லா உயிர்களுக்கும் அருள் புரியும் தன்மையிலுள்ளதுமாகும். ஆனால் ஐம்பெரும் பொருட்கள் உயிர்களின் பயனுக்காக இறையின் அருளாற்றலினால் மாயையாகிய நுண்பொருளி லிருந்து தோற்றுவிக்கப்பட்டவைகள் ஆகும்.

இறையாகிய மூலப்பொருள் இல்லையேல் ஐம் பெரும்பொருட்களின் தோற்றமோ அல்லது அவை களினின்றும் உண்டாக்கப்பட்ட ஏனைய பொருட் களின் தோற்றமோ அல்லது உலகக் காட்சியோ இருப்பதற்கில்லை. ஏனென்றால் நுண்பொருளாகிய மாயை இறையின் அருளாற்றலினால் தொழிற்செய் யப்படுகின்றதேயொழிய அது தானாகவே தொழிற் செய்வதற்கும் தொழிற்படுவதற்கும் இல்லை. ஆனமையான் மாயையின் நிலையறிந்தும் உயிர் களின் தன்மையறிந்தும் உயிர்களுக்கு வேண்டற் பாலதையறிந்தும் அம்மாயையிலிருந்து உயிரினங் களுக்கு இறையானது படைத்தளிக்கின்றது.

குலாலன் ஒருவன் பானை செய்வதற்கு மண்ணும் திகிரியும் அவனுக்கு வேண்டற்பாலன. முதற்கார ணமாகிய மண்ணிலிருந்து நிமித்த காரணமாகிய குலாலன் துணைக்காரணமாகிய திகிரியைக்கொண்டு பானை செய்கிறான் என்பது கண்கூடு. அஃதே போன்று முதற்காரணமாகிய மாயையிலிருந்து

நிமித்தகாரணமாகிய இறை துணைக்காரணமாகிய தன்னகத்தே உள்ள ஆற்றலைக்கொண்டு ஐம்பெரும்பொருட்களையும் ஏனைய பொருட்களையும் தோற்றுவிக்கிறது.

ஐம்பெரும்பொருட்களும் ஏனையவைகளும் தங்கள் நிலையையோ அல்லது உயிரின் நிலையையோ அல்லது இறையின் நிலையையோ அறியுந்தன்மை அற்றனவாய் நிற்கின்றன. ஆனல் இறையோ முற்றும் உணரும் தன்மையுடைத்தானதால் அது தந்நிலையையும் உயிர்களின் நிலையையும் மற்றவைகளின் நிலையையும் அறியும் இயல்புடைய பொருள் என்பதுஒருதலை. ஐம்பெரும்பொருட்களும் மற்றவைகளும் தோற்றுவிக்கப்பட்டு அழிக்கப்படும் பொருட்களேயாயினும் அவைகள் தோற்றுவிக்கப் படுவதற்கு காரணமாக உள்ள மாயையானது தோறற ஒடுக்கமின்றி இறையைப்போலவே எக்காலத்திலும் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவ்வாறின்றி சிலர் மாயை என்பதாக ஒரு பொருள் இல்லை என்றும் இறைவன் தன்னுடைய பேராற்றலினலே உயிரினங்களுக்கு வேண்டியவற்றை படைத்தளிக்கிருன் என்று கூறுவர். இறைவன் பேரறிவும் பேராற்றலும் உடையானென்பது உண்மையே எனினும் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு காரணப்பொருள் இருந்தாலன்றி தோற்றுவிப்பதற்கில்லை

மேல்நாட்டு அறிவியல் அறிஞர்கள் (The matter never dies) பொருள் எப்பொழுதும் அழிவதில்லை என்னும் பேருண்மையை ஆராய்ந்து ஒப்புக்கொண்டிருக்கிறர்கள். அதுவேயன்றியும் இருக்கிற ஒன்றிலிருந்து இறைவனனவன் உயிர்களுக்கு வேண்டியவற்றை படைத்தளிக்கலாமே தவிர

மாயையையே இறைவன் உண்டுபண்ணுவதற்கில்லை இறைவனே மாயையை தோற்றுவித்தான் என்று கொள்வதாயின் மாயையை ஏன் தோற்றுவித்தான் எப்பொழுது தோற்றுவித்தான் என்பன போன்ற வினுக்கள் எழும். அன்றியும் அவ்வினுக்களுக்கு மறுமொழி ஒன்றும் கூறுவதற்கில்லை. தோற்று வித்த காலம் உண்டு என்ருல் அதற்கு முன்பு ஏன் தோற்றுவிக்கவில்லை என்ரே அதனைத் தோற்று விப்பதற்குரிய மூலப்பொருள் எது என்ரே ஐயப் பாடுகள் தோன்றும். இவற்றை ஆராயுங்கால் மாயை என்னும் பொருளானது தோன்றுதல் மறைதல் என்னும் தன்மைக்கு இலக்காகாத எக் காலத்தும் உள்ள பொருளென்பது நன்கு புலனு கிறது. எனவே ஈறிலா இறைவன் தோற்ற ஒடுக்க மற்ற மாயையிலிருந்து எக்காலத்தும் உள்ள உயிர் களுக்கு வேண்டுவனவற்றைப் படைத்தளிக்கிருன் என்பதே முடிந்த முடிபாகிறது.

காரணப் பொருளாகிய மாயையையோ அதி னின்று தோற்றுவிக்கப்படும் ஐம்பெரும்பொருட் கள் முதலியவைகளோ இறைவனுக்கு யாதொரு பயனும் அளிப்பனவாக இல்லை. இறைவனல் அவை களுக்கு யாதொரு பயனுமில்லை. இறைவனுலும் ஐம்பெரும்பொருட்கள் முதலியவைகளாலும் பயன் பெறுவது உயிர்களேயாம்.

ஐம்பெரும்பொருட்கள் அவைகளால் ஆக்கப் படுபவைகள் உடல்கள் முதலியன காலத்திற்கும் தோற்றத்திற்கும் அளவிற்கும் உட்பட்டு, இவை களுக்கு உட்படாத எல்லையற்ற இறைவனுடைய எல்லைக்குட்பட்டு நின்று செயற்படுவனவாகும் இறைவனே காட்சிக்குட்பட்ட உலகம் முதலிய அனைத்தும் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும்

காரணப்பொருளாய் நிற்பதோடன்றி உயிர்களுக்கு எல்லாப்பேற்றையும் அளிக்கின்றான் என்பது உணரற்பாற்று.

## உயிரும் கடவுளும்

அங்கிங்கெனாதபடி எக்கும் நிறைந்ததாய், எல்லாம் வல்லதாய், பேரறிவும். வரம்பிலின்பமும் எல்லையற்ற அன்பும், எல்லாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் நிலையும் உள்ளதாகிய கடவுள் என்னும் தனிப்பெரும் முழுமுதற்பொருள் ஒன்றேயாகும்.

எண்ணிக்கையற்றனவாய், மனிதன் விலங்கு முதலிய எல்லா உயிரினங்களினிடத்தும் ஒவ்வொரு உடல்தோறும் ஒவ்வொரு உயிராக உள்ளதாய் சார்ந்த உடலில் அந்தந்த உடலளவிற்கு அறிவு நிகழ்ச்சி உள்ளதாய் இருப்பன உயிர்கள்.

உயிரானது அறிவுடைப் பொருளாய் இருந்தும் அறிவித்தாலன்றி அறியக்கூடாத நிலையிலுள்ளது. அன்றியும் உயிரானது கருவியாகிய உடலுடன் சேர்க்கப்பட்டாலன்றி தான் எதையும் உணர்வதற்கில்லை. அறிவுடைப்பொருளுடன் சேர்ந்த காலத்து அறியும் தன்மையுடையதாகவும் அறிவற்ற பொருளைச் சார்ந்த காலத்து அறியும் தன்மை நிகழ்வதற்கில்லாத நிலையிலேயும் உள்ளது உயிர். உயிரானது பற்றால் மறைக்கப்பட்டிருப்பதால்தான் கடவுளை தானாக உணரக்கூடிய நிலை அற்று இருக்கிறது. தன்னை மறைத்திருக்கும் பற்று நீங்கி தலைவனாகிய செம்பொருளைக்கண்டு உணர்வதற்குரிய முயற்சியை கையாளுவதற்காகவே இறைவன் உயிருக்கு மானிடப் பிறவியை அளித்தனன் என்று உணர்க.

இறைவன் பேரறிவும், பேரருளும், பேராற்றலும் உடையவனாய் இருத்தலினாலேதான் உயிர்களுக்கு பயன்படும் முறையில் ஐம்பெரும்பொருட்களையும் மற்றும் வேண்டற்பாலனவையையும் உள்பொருளாம் மாயையிலிருந்து படைத்தளிக்கின்றான் என்பதைக் கண்டுகொள்க. இறைவனானவன் இயல்பாகவே எல்லாவற்றையும் அறியும்தன்மையுடையவனாகவும் உயிர்களுக்கு அறிவதற்கு வேண்டியனவற்றை அளிப்பவனாகவும் இருக்கிறான்.

உயிரானது இறைவனை அறியவொட்டாது மறைத்துக்கொண்டிருப்பது பற்று. அப்பற்றானது உயிரைவிட்டு தானாக ஒருபோதும் விலகாது. தன்னிடத்திலிருந்து அப்பற்றை நீக்கிக்கொள்ள உயிருக்கே ஆற்றலுமில்லை. அப்பற்றானது உயிரினிடத்து எப்பொழுதாவது சென்று சேர்ந்ததும் அல்ல. உயிரானது பற்றோடு கூடியதாகவும் கொள்வதற்கில்லை. செம்பிற் களிம்பு அதனிடத்தே இயற்கையாக இருப்பதுபோல உயிரானது பற்றால் இயற்கையாகவே பற்றப்பட்டதாகவே இருக்கின்றது. இங்ஙனமெனின் அப்பற்றை எவ்வாறு நீக்கிகொள்வது என்பதுபற்றி ஆராய்வோம்

பற்று அறிவற்ற பொருளாக இருந்தாலும் உயிரை மறைத்து தன் வயப்படுத்திக்கொண்டு நிற்பதில் மிக்க வன்மையுடையதாகவே காணப்படுகின்றது அப்பற்றையும் உயிரையும்விட பன்மடங்கு ஆற்றல் நிறைந்த பொருளாகும் கடவுள். எனவே இயற்கையாகவே பற்றுடன் கூடி நிற்கும் உயிரானது, இயற்கையாகவே பற்று அற்றவனாக உள்ள இறைவனை, செம்மை வழி நின்று பற்றினால் இறைவன் உயிரின் செய்கைக்கு உவந்து தன் அருளாற்றலினாலே அவ்வுயிரினிடத்துள்ள பற்றை

அறவேநீக்கி அவ்வுயிர் அதனையே காணும் நிலையை முன்னர் அளித்து, பின்னர் இறைவனுகிய தன்னைக் காணும் நிலையையும் அவ்வுயிருக்கு அளிக்கின்ருன்

உயிருக்கு இறைவனைப் பற்றுவதற்கு கருவியாகிய உடல் வேண்டற்பாலதாய் இருக்கின்றது. உடலைப்பெற்று நிற்பதே பிறவியெனக் கூறப்படுகிறது. பிறவியைப்பெற்ற ஒருயிர் பசி, நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்களுக்கு உட்பட்டே தீரவேண்டியிருக்கிறது. அன்றியும் வாழ்க்கையில் ஒரு மனிதன் பலதிறப்பட்ட இன்ப துன்பங்களில் ஈடுபட நேரிடுகிறது. இறைவனைப் பற்றி, பிறப்பு இறப்புக்கு உட்படாத நிலையைப் பெற்ருலொழிய ஓர் உயிருக்கு பிறப்பு இறப்பும் அதனுல் ஏற்படும் இன்ப துன்பங்களும் அதற்கு காரணமாகிய வினைகளும் ஒருபொழுதும் நீங்கா. எந்த உயிரும் மானிடப்பிறவி ஒன்று தவிர மற்ற விலங்கு முதலிய பிறவியினுல் இறைவனைப்பற்றவும் அறியவும் வழியில்லை ஆனதால் மானிடயாக்கையைப் பெற்ற ஒரு மனிதன் அந்தப் பிறவியின் இறுதிக்குள்ளாகவே, விரைந்து இறைநிலையறிந்து, பற்றி, இறப்பைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இறப்பைக் கடந்தவனுக்கு மீண்டும் பிறப்பில்லை என்பது உறுதி. அவ்வழி நாடாது கண்டதேகண்டு அடுத்தடுத்து கேட்டதே கேட்டு, உண்டதே உண்டு உடுத்ததே உடுத்து மனிதன் கடவுள் நாட்களைக் கழித்துக்கொண்டிருப்பானுகில் அப்பிறவியின் இறுதியிலே மரணத்திற்குட்படுவதன்றி மீண்டும் பல பிறவிகளை எடுக்க நேரிடும் என்ற பேரிடராம் நிலையை உய்த்துணர்ந்து ஒவ்வொருவனும் காலந் தாழ்த்தாது தக்க பருவத்திலேயே இறையைப் பற்றி உய்யவேண்டியது பிறவியின் பயனென்று அறியக்கிடக்கின்றது.

இறைவனுக்கோ பற்றுமில்லை பற்றுலாய துன்பமுமில்லை. பிறப்பு இறப்புமில்லை. பிறப்பு இறப்பினல் உயிருக்கு நேரிடும் இன்ப துன்பங்களும் இல்லை. இறைவனனவன் யாதொரு குறையுமின்றி இன்பமயமாய் நிறைந்து நிற்கிருன். இறைவனுக்கு உயிரைப்போன்று வேண்டுதல் வேண்டாமை ஆகிய இரண்டு நிலையும் இல்லை.

பல உயிர்களும் எல்லையற்ற நிலையுடைய இறைவனுக்குள்ளே அடங்கி நிற்கின்றன. ஆனல் இறைவனே எல்லா உயிர்களுக்குள்ளேயும் இருப்பவனுகவும் அவைகளுக்கு வெளியே பரந்து நிறைந்து நிற்பவனுகவும் இருக்கின்ருன். கலப்புத் தன்மையால் உயிரும் கடவுளும் ஒன்றுபோல எண்ணப்படுவதாயிருந்தாலும் பொருட்தன்மையால் உயிர் வேறு கடவுள் வேருகவே கொள்ளப்படல் வேண்டும்.

கடவுளும் உயிரும் ஒன்ரு இரண்டா என்ற வினவிற்கு மறுமொழி கூறுவாம். அவ்வினவிற்கு இரண்டற்றது என்று கூறவேண்டியிருக்கிறது. ஒன்ருயிருந்தால் அதைக் குறிப்பிடுவதற்கு ஒன்று என்ற சொல்லும், இரண்டாயிருந்தால் அதனைக் குறிப்பிடுவதற்கு இரண்டு என்ற சொல்லும் இருக்க இரண்டற்றது என ஏன் சொல்லவேண்டும் என்பதுபற்றி விளக்குவாம்.

கடவுளும் உயிரும் ஒன்ருயிருந்தால் கடவுள் எனும் பொருள் தவிர உயிரென்று மற்ருெரு பெயர் குறிப்பிட வேண்டியதில்லை. அன்றியும் வழிபாடு செய்யப்படும் பொருள், செய்யும் பொருள் என்ற இரண்டு வகையான பொருட்கள் இல்லை என்று ஆகிவிடும். அஃதன்றியும் பிறப்பு இறப்பு

அற்றவன் கடவுள் பிறப்பு இறப்புக்கு உட்பட்டன உயிர்கள் என்ற உண்மை இல்லை என்று ஏற்படும். உயிர்கள் இல்லாமல் கடவுள் ஒன்றே பல உடல் களில் பல பிறவிக்கு உட்படுதல் என்பதோ அல்லது கடவுளின் சாயைகளானவை பிறப்புக்குட்பட்டு தொழில் செய்கின்றன என்று எண்ணுவதோ உண்மைக்கும் ஆராய்ச்சிக்கும் மாறுபட்டதாகவே கொள்ளப்படும். கடவுள் பல உயிர்களாக மாறவும் முடியாது, மாறுவதற்கும் இல்லை. உயிர்கள் பற்றால் மறைக்கப்பட்டிருக்கும் பொருட்களாயிருப்பதால் அது கூடாமை அறிக. பகற்காலத்தில் கதிரவன் சாயையானது தண்ணீரில் தென்படுகிறது ஆனால் தண்ணீரில் கதிரவன்போன்று தென்படுகிற தோற்றம் கதிரவன் ஆகமுடியாது, ஆகுவதற்கும் இல்லை. கதிரவன் செயலை தோற்றம் மேற்கொண்டு செயலாற்ற இயலாது. அதுபோன்றே கடவுளின் சாயையோ அல்லது தோற்றங்களோ அறிவுடைப் பொருட்களாகிய உயிர்களாக ஆகமுடியாது. அவை கள் உடல் பெற்று செயலாற்றவும் இல்லை. எனவே கடவுளென்பது தனிப்பட்ட ஒரு முழுமுதற்பொருள் என்பதும் உயிர்கள் என்பன அதன் எல்லைக்குட் பட்டு அதனிடத்திலேயே உள்ள பல பொருட்கள் என்பதும் மறுக்கமுடியாத முடிந்த முடிபாகும். இதுகாறும் கூறியவற்றால் கடவுளும், உயிர்களும் ஒன்று என்று சொல்வது பொருத்தமற்றது என் பதைக் கண்டோம்.

கடவுளும் உயிரும் இரண்டல்ல என்பததற்கு காரணம் கூறுதும். பொருட்தன்மையால் கடவுள் வேறு உயிர் வேறு என்பது உண்மையாயினும் கலப்புத்தன்மையால் ஒன்றென்பதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது உயிரானது கடவு ளினுடைய எல்லைக்குட்பட்டு அதனிடத்திலேயே

இருக்கின்றதேயொழிய, அதைவிட்டுகடவுளில்லாத ஒரு தனியிடத்திலே உயிர் இல்லவும் இல்லை, இருக்கவும் முடியாது. கடவுளும் உயிரைத் தன்னகத்தே உடையதாக இருப்பதன்றி தான் உயிரின் உள்ளேயும் உயிருக்கு உயிராக நிறைந்து நிற்கின்றது. அத்தன்மையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இரண்டென்று பிரித்துக்கூற இயலாத வகையிலே ஒன்ருகக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே கடவுளும் உயிரும் கலப்புத்தன்மையில் ஒன்ருகவும் பொருட்தன்மையில் இரண்டாகவும் கொள்ள வேண்டியிருப்பதால், அதனை ஒன்றென்றும், இரண்டென்றும், ஒன்றல்லவென்றும், இரண்டல்லவென்றும் இதல்லாது வேறெத்தன்மையும் கூற இயலாதிருப்பதினுல், உண்மை, இன்மை, மறுதலை என்றமூன்று பொருட்களையும் உணரும்பொருட்டே கடவுளையும் உயிரையும் இரண்டற்றது என்று கூறலாயிற்று. இதுவே செம்மையாய் ஆராய்ந்த கடவுட்கொள்கையரின் தெளிவான முடிபென்று உணர்க.

கடவுளென்று தனியாக ஒன்று இல்லையென்றும் உயிர்களென்பதாக தனியாக பல பொருட்கள் இல்லையென்றும் ஒரே பொருள் காணக்கூடிய எல்லா உடல்களுக்குள்ளும் மற்ற பொருட்களுக்குள்ளும் அதற்கப்பாற்பட்டும் நிறைந்து நிற்கிறது என்றும் ஒரு பொருட்கொள்கையர் (ஏகான்மவாதி) கூருநிற்பர். அவர் கூற்று பொருந்தாக் கூற்றேயாம். ஒருபொருள்தான் உள்ளது என்பது உண்மையெனின் அதற்கு பலதிறப்பட்ட உடல்கள் ஏற்படவேண்டியதில்லை. அன்றியும் எல்லா உடல்களுக்குள்ளும் இருக்கும் பொருள் ஒன்ருயிருந்தால் எல்லாருக்கும் அறிவு, பக்குவம், செய்கை முதலியன ஒரே முறையில் அன்ரே இருத்தல்

வேண்டும். ஒரே பொருளாயின் பலர் பலவாறாக இருக்கக்காரணம் என்னே? ஒருவனுக்கு இன்பமும் மற்றொருவன் துன்பமும், ஒருவன் விரும்புவதை மற்றொருவன் வெறுப்பதும், ஒருவன் நோய் வாய்ப்பட்டிருக்க மற்றொருவன் உடல் நலத்துடன் இருப்பதும் என்பனவாய இத்தகைய நிகழ்ச்சி களுக்கு காரணம் வேண்டும். எங்கும் நிறைந்த ஒரு பெரும்பொருள் பல உடல்களுக்குட்பட்டு பல இன்ப துன்பங்களுக்குட்படுகிறதென்பது வியப் புக்குரியதே. ஒரே பொருளாயிருப்பின் ஓரிடத்தில் அறிவின்பாற்பட்ட நிகழ்ச்சியும் ஓரிடத்தில் அறி யாமையின்பாற்பட்ட நிகழ்ச்சியும் காணுதற்கில்லை. ஓரிடத்தில் உண்பதற்கேற்றபழம் பால் முதலியன இருந்தும் அதை உண்பான் இல்லையேல் அவை களிருந்தும் பயனற்றதாய்விடும். அதுபோன்றே பெரும் இன்ப நிலையோடு கூடிய ஒரு முழுமுதற் பொருளிருக்க அதனிடத்துள்ள இன்பத்தை துய்க்க உயிர்களாம் பொருட்கள் இல்லையேல் அப் பொருள் இருந்தும் பயனற்றதாக ஆகிவிடும். உணர்வானும், உணரப்படுவானும், வழிபாடு செய் வானும், செய்யப்படுவானும், இன்பதுன்பத்திற்கும் பிறப்பு இறப்பிற்கும் உட்படுவானும், இவைகள் இன்றியே எப்பொழுதும் இருப்பானும் ஒன்றெனக் கூறும் ஒருபொருட்கொள்கையரின் கூற்று அறி வாளிகளால் எள்ளி நகையாடுதற்பாலதாமென் றுணர்க.

ஒவ்வொரு உயிரும் ஒரு பிறப்பைத்தான் பெறுகிறதென்றும் முன்னும் பின்னும் பிறப்புகள் கிடையாது என்றும், அவ்வாறு பெறும் ஒரு பிறப் பின் கால அளவு முடிந்தவுடன் இறைவனுடன் ஒன்றுபட்டுவிடுகிறது என்றும் சிலர்கருதுகின்றனர் அக்கருத்து உண்மையின்பாற்படுகின்றதா என்று

ஆராய்வோம். உலகிலே மக்கள், விலங்குகள், பறவைகள் முதலிய பல உயிரினங்களைப் பார்க்கிறோம். எல்லா உயிர்களுக்கும் ஒவ்வோர் பிறவி தான் உண்டு என்பது உண்மையானால் சில உயிர்களை மக்களாகவும், சில உயிர்களை விலங்குகளாகவும், சில உயிர்களை பறவைகளாகவும், சில உயிர்களை ஊர்ந்து செல்லும் இனங்களாகவும், சில உயிர்களை தாவரங்களாகவும் படைக்கப்பட்டிருப்பது எல்லையற்ற அன்புடைய இறைவனுக்கு உரிய செயலல்ல என்று ஏற்படுகிறது. அக்கொள்கையை வைத்துப் பார்க்கும்பொழுது இன்றைய உலகில் உள்ள மக்கள் முதலிய உயிரினங்களில் ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு பிறவியென்றே வைத்துக்கொள்வோம். சில ஆண்டுகளுக்கு முன் இறப்புக்குட்பட்ட உயிரினங்களில் ஒவ்வொரு உயிர்க்கும் பிறப்பை முன்னரே அளித்ததாக ஏற்படும். பல ஆண்டுகளுக்கு முன் மரணத்திற்குட்பட்ட உயிரினங்களில் ஒவ்வொரு உயிர்க்கும் பிறப்பை பல ஆண்டுகளுக்கு முன்னரே அளித்ததாக ஏற்படும். வருங்காலத்தில் பிறப்புக்குட்படும் உயிரினங்களில் ஒவ்வொரு உயிரும் பிறவியை இன்றுவரை பெறாமலிருந்து வருங்காலத்தில் பெற வேண்டியதாக உள்ளது என்றும் ஏற்படுகிறது. எந்த ஒரு உயிரும் அக்கொள்கைப்படி தான் பெறும் ஒரு பிறவியின் காலம் முடிந்தவுடன் இறைவனுடன் ஒன்றுபடுகிறது என்பதை ஒப்புக்கொள்வதாயிருந்தால், சில உயிர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே அந்த ஒரு பிறவியைப்பெற்று பிறவியின் இறுதியிலே இறைவனுடன் ஒன்றுபட்டன என்றும், சில உயிர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னே அந்நிலை அடைந்தன என்றும், சில உயிர்கள் வருங்காலத்தில் ஒரு பிறவியைப் பெற்று அந்நிலை அடையுமென்றும் ஏற்படுகிறபடியால் அன்பு நிறைந்த

இறைவன் சில உயிர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னும், சில, சில ஆண்டுகளுக்கு முன்னும் சில உயிர்கள் வருங்காலத்திலும் தன்னுடன் ஒன்றுபட்டு பேரின்பம் துய்க்கச்செய்வது அவனது பெருந்தகைமைக்கும் பேரருளுக்கும் இழுக்காகவன்றோ முடியும்.

உலகின்கண் நாள்தோறும் மக்கள் முதலியன பிறத்தலையும் இறத்தலையும் காண்கிறோம். இறக்கின்ற உயிரினங்கள் ஒவ்வொரு நாளிலும் இறைவனுடன் ஒன்றுபட்டு பேரின்பப்பேற்றில் திளைக்கின்றனவென்று கொள்ளவேண்டி ஏற்படும். எந்த உயிரும் இறைவன் இயற்கை நிலையைக் கண்டு பேரின்பமுறுவது அவ்வளவு எளிய செயலல்ல. அஃதன்றியும் இறப்புக்குட்படும் எந்த உயிரும் இறைவனுடன் ஒன்றுபடவோ பேரின்பம் பெறவோ இயலாதென்பதும் அல்லது இறைவனை நேரில் கண்டறிந்த எந்த உயிரும் இறப்புக்குட்படாது என்பதும் ஆராய்வோருக்கு செவ்வனே விளங்கும். இதுபற்றிய விரிவை எமது **சாகாக்கலை** எனும் நூலில் காண்க. எனவே இதுகாறும் கூறியவற்றால் ஒவ்வொரு உயிரும் ஒரு பிறவிதான் பெறுகிறது என்று எண்ணும் சிலரின் கருத்து உண்மைக்குப் புறம்பானதென்று கொள்க.

ஒருவன் ஆழ்ந்து பார்க்கும்போது தான் மனைவி மக்களிடத்தோ, மற்ற உறவினர்களிடத்தோ, நட்பாளர்களிடத்தோ அன்பு கொள்வதைக்காட்டிலும், தன்னிடத்தில்தான் மட்டிலா அன்பு வைக்கிறான் என்பதை உணர்கிறான். அதாவது ஒருவன் தனக்கு நோய் வராவண்ணம் தன்னை பாதுகாத்துக்கொள்ளல், தான் நல்லொழுக்கத்திலே வளர்ச்சியடைய முயற்சித்தல், கற்றோ

கேட்டோ அறிவைப்பெருக்கிக்கொள்ள முற்படுதல் தனக்கு வேண்டிய நன்மைகளையும் இன்பங்களை யும் அடைந்து துய்க்க தலைப்படுதல் இன்னோரன்ன பல முறைகளிலே தனக்கு பண்பாட்டை தேடிக் கொள்ள முயன்று வருவதால் மற்ற எவர்களைக் காட்டிலும் தன்னிடத்தேதான் நிறைந்த அன்பு கொள்ளுகிறான் என்பது திண்ணமே. தன்னைத் தான் விரும்புதலும் இன்றியமையாததாய் நிற் கின்றது. இன்னும் ஆழ்ந்து பார்க்குங்கால் தன் னிடத்திலே தான் கொண்டுள்ள அன்பைக்காட் டிலும் இறைவன் தன்னிடத்திலே மிகுந்த அன் புடையவனாயிருத்தலை ஒருவன் உணர நேரிடுகிறது. இறைவனானவன் எல்லா உயிர்களும் அவைகளி னிடத்து இயற்கையாக உள்ள பற்று நீங்கப்பெற வும், தன்னையறிந்து பேரின்பம் துய்த்தல் வேண்டு மென்றும் திருவுளங்கொண்டு உயிர்களுக்கு ஆவன அளித்து நிற்பதால் ஒருவன் தன்னைத்தான் விரும் பும் அளவைவிட பெருமளவிற்கு இறைவன் தன்னை விரும்புகிறான் என்னும் கருத்தை இவ் வியலிலே வலியுறுத்திக்கூற எண்ணங்கொண்டனம்

முன்னர் கூறியவாறு எல்லா உயிர்களும் பிறப்பு இறப்பாம் துன்பம் நீங்கி முடிவற்ற பேரின் பத்தை பெறுவான்வேண்டி திருவுளங்கொண்டுள்ள இறைவனால் எக்காலத்திலும், எந்நிலையிலும் உயிர் களுக்கு பயன் இருப்பதாக உணருகின்றோமே யொழிய, அவ்வுயிர்களால் இறைவனுக்கு எவ் வாற்றானும் யாதொரு பயனுமில்லை என்பது யாம் தெளிவாக உணரக்கூடிய தில்லை என்று கூறி உயிரும் கடவுளும் என்னும் இவ்வியலை மீண்டும் விரிப்பிற்கஞ்சி விடுத்தனம். அடுத்த இயலிலே கடவுளும் அதன் தன்மையும் என்பது பற்றி விரிவாக ஆராய்வோம்.

## கடவுளும் அதன் தன்மையும்

கடவுள் என்னும் சொல்லுக்கு உள்ளத்தைக் கடந்தது என்பது ஒரு பொருள். அதாவது மனிதன் மனம், மொழி, மெய் ஆகிய மூன்று உறுப்புக்களாலும் கடவுளின் தன்மையை எண்ணிப் பார்க்கவோ, சொல்லால் அளவிட்டுக் கூறவோ, பற்றி உணரவோ இயலாத நிலையில் உள்ளான் என்று ஆகிறது. உள்ளத்தால் மட்டிலே அல்ல உள்ளத்திலே நிகழுறும் உணர்ச்சிக்கும் எட்டாத நிலையில் உள்ளது கடவுள்.

கடவுள் என்பதற்கு உடலினுள்ளே உள்ளது என்பது மற்றொரு பொருள். ஆனல் எங்கும் நிறைந்த முழுமுதற்பொருளாய் உள்ள கடவுள் வெளியிலே மட்டில் இருந்து உள்ளேயும் இல்லாமல் இருப்பதற்கில்லை. உடலுக்குள்ளே இருந்து வெளியில் இல்லாமல் இருப்பதற்கும் இல்லை. உடலுக்குள்ளே இல்லை என்று கொள்வதாயிருந்தால் காணப்படும் எந்த உடலினுள்ளும் இல்லையென்று ஏற்படும். எந்த உடலிலும் இல்லையென்றால் உடலுக்கு வெளியேயும் இல்லையென்றே முடியும். எனவே கடவுளென்பதாக ஒரு பொருள் யாண்டும் உளதன்று என்று கருத இடமேற்படும். ஆனமையான் கடவுளாகிய செம்பொருள் உலகிலும், உலகில் காணப்படும் எப்பொருளிலும், எவ்வுடலிலும் உடலிலுள்ள எவ்வுயிரிலும் நிறைந்து நிற்பதுடன் உலகிற்கு அப்பாற்பட்டும் மேலும் கீழும் எல்லா உலகங்களுக்கப்பாலும் நிறைந்து எல்லையற்ற நிலையிலே ஓங்கி நிற்கின்றதென்பது அறியக்கூடிய உண்மையாகும்.

கடவுள் என்னும் பொருளானது எல்லாம்வல்லதாய், எங்கும் நிறைந்ததாய் உள்ளது. அது எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக்கொண்டு தான் எவற்றினும் அடங்காது விரிந்து நிறைந்து நிற்கும் எல்லையற்ற தனிப்பெரும் முழுமுதற்பொருளாகும். அது எக்காலத்திலும் தோன்றியதுமல்ல, அதை தோற்றுவிக்கும் நிலையில் வேறெப்பொருளும் இல்லை. அது எக்காலத்திலும் அழியக்கூடியதன்று, அதை அழிக்கக்கூடிய நிலையில் வேறெப்பொருளும் இல்லையென்பது றுதி. எனவே கடவுளானது தாயிலி தந்தையிலி என்றும் கேடிலி என்றும் கொள்ளப்படும்.

கடவுளானது உடலற்றது, எனவே உடலாலாய துன்பங்களுமற்றது. மனைவி மக்களற்றது. அது பற்றற்றதாய் உள்ளது. எந்தப் பொருளையும் அல்லது எந்த ஒன்றையும் பெறவேண்டிய நிலையில் கடவுள் இல்லை. எப்பொருளையும் வெறுக்கும் நிலையிலும் அது இல்லை. வேண்டுதல், வேண்டாமை ஆகிய இரண்டு தன்மையும் அற்றநிலையில் உள்ளது கடவுள். கடவுள் உடலற்றது ஆனமையான் பசி, நோய், மூப்பு, சாக்காடு, மூதலிய எவ்வகை இடுக்கணுமற்றது. அன்றியும் உலகியலிலே காணுப்படும் எவ்விதமான சிற்றின்பங்களும் அதைச் சார்வதற்கில்லை. மேலும் உறக்கம், விழிப்பு அற்றதாயும், நினைப்பு, மறப்பு அற்றதாயும், கூடுதல், குறைதல் அற்றதாயும், எக்காலத்தும் எந்தக்காரணத்தை முன்னிட்டும் எவ்விதமான மாறுதலுக்குட்படாததாயும் உள்ளது கடவுள்.

எல்லா எழுத்துக்களும் அகரமாகிய முதல் எழுத்திலிருந்து தோன்றினவாயினும் அப்படி தோன்றிய எந்தஎழுத்தையும் அகரத்தின் சேர்க்கை

யின்றி உச்சரிக்க இயலாது போன்று, முதல்வனும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட எந்தப்பொருளும் இறைவன் துணையின்றி இயங்குவதற்கு இல்லை என்பது உணரப்படுகிறது. அதாவது அகரம், எல்லா எழுத்துக்களுக்கும் முன்னர் உள்ள முதல் எழுத்தாகவும், அவைகள் தோன்றுவதற்கு காரணமாகவும், தோன்றிய பின்னும் அவ்வெழுத்துக்கள் உச்சரிக்கப்படுவதற்கு துணை செய்வதாகவும் நிற்பது போல, இறைவனானவன் எல்லாப் பொருட்களுக்கும், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முன் உள்ளவனாகவும் எல்லாம் தோன்றுவதற்கு காரணமாக உள்ளவனாகவும், எல்லா பொருட்களும் இயங்குவதற்கு அரண் செய்பவனாகவும் உள்ளான் என்பது தெளிதற்பாற்று.

இறைவன் தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பற்றுக்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய எண்குணங்களுடையவன் ஆனமையான் முறையே அவற்றை விளக்குவாம்.

இறைவன் எதனிலும் கட்டுண்டவனல்ல. அவனுக்கு மேற்பட்ட பொருளும் யாதொன்றும் கிடையாது. வேறு எந்தப்பொருளினுடைய துணையும் இன்றி எச்செயலையும் ஆற்ற வல்லவன். எனவே இறைவன் தன்வயத்தனாதல் எனும் தன்மையுடையான் என்பது தெற்றெனை விளங்குகிறது.

இறைவன் உடம்பற்றவன். உயிர் பெற்றுள்ளவில் தூய்மை இல்லை. தூய்மை பெற இறைவனை

நோக்கி வழிபாடியற்றி அன்னன் அருளால் தூய் மையைப் பெறவேண்டியிருக்கிறது. ஆனல் இறை வனே வழிபாடியற்றும் உயிருக்கு தூய்மையளிப்ப தோடன்றி இயற்கையாகவே தூய்மையுள்ளவ னகவே இருக்கின்றன். ஆனதுபற்றி இறைவன் தூயவுடம்பினன் என்பதைக் கண்டுகொள்க.

உயிரானது எதையும் அறிவிக்க அறியும் தன் மையிலுள்ளது. அன்றியும் அதற்கு எப்பொருளே அறிவதற்கும் உடலாகிய கருவியும் வேண்டற் பாலது. இறைவனுக்கோ உடலுமில்லை, ஒன்றை யறிய அவனுக்கு எக்கருவியும் வேண்டற்பாலதல்ல. உயிர் உடலாம் கருவியைக்கொண்டு உணர்கின்ற எவற்றையும் எக்கருவியுமின்றியே உணரும் தன் மையில் உள்ளவன் இறைவன். மேலும் உயிரால் கருவியைக்கொண்டு உணர முடியாத அரிய பெரிய நிலைகளையும் உடலின்றியே உணரும் தன்மையில் உள்ளவன் கடவுள். இவ்வுண்மையைக்கொண்டு இறைவனனவன் இயற்கையுணர்வினன் என்பது அறியப்படுகிறது.

உயிரானது தன் சிற்றறிவிற்கு எட்டிய வரை யில் உணருந் தன்மையிலுள்ளது. கற்ற அல்லது கேட்ட அளவுக்கு அறிவை சிறிது சிறிதாக பெருக் கிக்கொள்ளும் நிலையிலுள்ளது. அவ்வாறு கற்றல் கேட்டலினல் உயிரால் எல்லாவற்றையும் உணர ஒருக்காலும் இயலாது. இறைவனே கற்றும் கேட் டும் உணரவேண்டிய அல்லது அறிவு பெற வேண்டிய நிலையிலில்லை. அன்றியும் எல்லாவற்றை யும் முக்காலத்திலும் உணருந்தன்மையுடையவன். ஆதலால் இறைவன் முற்றுமுணர்பவன் என்பது பெறப்படுகின்றது.

உயிரானது பற்றுடன் கூடியதாகும். பற்றால் மறைக்கப்பட்டிருப்பதால் இறைவனை அறிய வொண்ணா நிலையில் உயிர் நிற்கின்றது. தன்னை நோக்கித் தவம் புரியும் உயிர்க்கு தலைவனாகிய தன்னைக்கண்டு மகிழும் நிலையை இயற்கையாகவே பற்றற்று நிற்பவனாகிய இறைவன் அளிக்கின்றான். பற்றுடையவனாகில் உயிரினிடத்துள்ள பற்றை இறைவனால் எங்ஙனம் நீக்க இயலும்? உயிர்க்குள்ள பற்றை நீக்கியருளுந்தலை உண்மை வரலாறு மூலம் அறிவதால் இயல்பாகவே பற்றுக்கள் நீங்கிய தன்மையுடையவனென்பது உணரற்பாற்று.

உயிர்களிடத்து அன்பு நிலை சிறிது சிறிதாக பெருகி அருள்நிலை நிலைபெறவேண்டியிருக்கிறது. அவ்வுயிர்க்கு மனத்தூய்மையையும் தவத்தின் அளவையும் அறிந்து அருள் செய்யும் நிலையிலுள்ளான் இறைவன். எல்லா உயிர்கட்கும் எக்காலத்தும் பெருந்துணையாய் நிற்பதாலும் உயிர்க்கு பக்குவம் வந்த காலத்து அதனிடத்துள்ள பற்றை நீக்கி அதனைப் பேரின்பத்திலாழ்த்துதலாலும் இறைவன் பேரருளுடையவன் என்பது நன்கு புலனாகிறது.

உயிர்கட்குத் தேவையான ஐம்பெரும்பொருட்களையும் இன்னும் மற்றவைகளையும் படைத்தளிப்பதனாலும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பேரருட்பெருந்தொழில்களாகிய ஐந்தினையும் இயற்றி அருளுவதாலும், உயிர்களினிடத்து இயற்கையாகவுள்ள மிக வலிமையுடைத்தாகிய பற்றை நீக்கி அருளுதலினாலும் இறைவன் முடிவிலாற்றலுடையவன் என்று கொள்வதில் யாதொரு ஐயப்பாடுமில்லை.

உலகிடையே உயிர்கள் பன்முறை பிறப்பிறப்பாம் துன்பத்திலாழ்ந்து துயருறுகின்றன. அவ்வாறுள்ள உயிர்கள் யாவையும் இன்பத்தையே விரும்பி அடைய முயலுகின்றன. ஆனால் அழிதல் தன்மையுடைய உலக இன்பங்களிலே அவைகள் நாடுவதால் அழிதலுக்குட்படுகின்றன. கேடிலியாமிறைவனைப் பற்றுங்கால் உலகத்துன்பங்கள் நீங்கி இறைவனைச் சாரும் தன்மையுடையனவாக ஆகின்றன. இறைவனையறிந்த பின்னரும் இறைவனுடன் ஒன்றுபட்ட பின்னரும் துய்க்கும் இன்பம் முடிவற்றதும் வரம்பற்றதுமாய் இருப்பதால் அத்தகைய பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பி நிற்கும் தன்மையிலே உள்ள இறைவனை வரம்பிலின்பமுடையவன் என தெளிந்துகொள்க. இதுகாறும் கூறியவற்றால் இறைவன் எண்குணமுடையான் என்னும் அரிய நிலையை உணர்த்தப்பட்டது.

மேலே இறைவன் எண்குணமுடையான் என்பதுபற்றி சிறிது விளக்கப்பட்டது. ஆனால் இறைவனுடைய தன்மையை எவராலும், எவ்வகையாலும் வாயால் அளவிட்டுக்கூறவோ எழுத்தால் அளவிட்டுக்குறிக்கவோ இயலாதென்பது மறுக்கமுடியாத தனிப்பெரும் உண்மையாகும். உண்மை இவ்வாறிருக்க இறைவனுக்கு எண்குணந்தான் உண்டு என்று வரையறுத்துக்கூற இயலாது. இறைவன் நிலை அவ்வாறெனின் எண்குணமுடையானென்று சொல்லப்பட்டது ஒரு அளவுக்கு அவனிடத்தே உள்ள சிறந்த தன்மைகளை உணர்த்தும் முகத்தானன்றி வேறன்று. அவைகளல்லாது இறைவன் அருட்பேரொளியினனாகவும் இன்னும் பலதிறப்பட்ட சிறப்பியல்புகள் உடையவனாகவும் உள்ளான் என்பது ஆராய அறியக்கிடக்கின்றது.

இறைவனுடைய அரும்பெருந்தன்மைகளை நம்போல்வாரன்றி, திருவருட் பேற்றினாலே இறைவனின் இயற்கை நிலையைக் கண்டறிந்த கடவுளறிஞராலேகூட மற்றையர்க்கு விளக்கிக்கூற முடியாதென்பது ஒருதலை. எங்ஙனமெனின் விளக்குவாம்.

உலகியலிலே பருவமடைந்து திருமணங்கொண்ட ஒரு அரிவையர் கணவருடன் கூடுதலால் பெறும் இன்ப நிலையை அங்ஙனம் பருவமடைந்து திருமணங்கொள்ளாத ஒரு சிறு மகளிர்க்கு சொல்லால் விளக்கிக்கூற ஒருபோதும் இயலாது. யாதாயினும் கூறினாலும் சிறு மகளார் அதை அறியவும் ஒண்ணாது. முடிவுடைத்தாகிய இச்சிற்றின்ப நிலையையே துய்த்துணர்ந்த மகளிர் அந்நிலையெய்தப்பெறாத சிறுமகளிர்க்கு உணர்த்த இயலாது என்பதைக் காணுங்கால், எல்லையற்ற பேரின்பநிலையையும், பல சிறந்த இயல்புகளையும் இயற்கையிலேயே உடையவனாகிற இறைவனைக்கண்டு அவனிடத்துள்ள பேரின்பப்பயனைத் துய்த்த கடவுளறிஞராம் பெரியார்கள் அந்நிலை கைவரப்பெறாத ஏனைய மக்கட்குத் தாம் கண்ட கடவுட்காட்சியின் சிறப்பையும், பல இயற்கை வண்ணங்களையும், பேரின்பத்தில் திளைத்து தாம் பெற்ற மகிழ்வின் திறத்தையும் எவ்வாற்றானும் வாயாற் கூறவோ, எழுத்தாற் குறிக்கவோ கூடாமையை ஓர்ந்தறிக. அதாவது தன்னை உணர்ந்த கடவுளறிஞராலும் உணர்ந்த தன்மையைச் சொல்லுதற்கரிய நிலையில் இறைவன் நிற்கின்றான் என்பது கட்புலனாகின்றது

முன் ஒன்பது இயல்களிலே ஐம்பெரும் பொருட்கள், அவைகளின் தன்மை, அவைகளும் உலக நிகழ்ச்சியும், உடல், உயிர், உடலும்உயிரும், மூலப்பொருள் அல்லது கடவுள் உலகமும் கடவுளும்

உயிரும் கடவுளும் என்னும் பொருட்களைப் பற்றி நன்கு ஆராய்ந்ததில் ஐம்பெரும்பொருட்கள், அவைகளால் ஆக்கப்பட்ட உடல் முதலியவைகள் அறிவற்ற பொருட்கள் என்றும், இவைகளனைத்தும் அறிவுடைப்பொருட்களாம் உயிர்களின் பயனுக்காக பேரறிவுடைப் பெரும்பொருளாம் இறைவனால் மாயை என்னும் முதற்காரணப் பொருளிலிருந்து படைத்தளிக்கப்பட்டன என்பது காணப்பட்டது. பத்தாம் இயலாகிய இவ்விறுதி இயலிலே இறைவனைப்பற்றியும் அவனுடைய இயற்கைத் தொன்மையான சிறப்புகளைப்பற்றியும் ஒருசிறிது ஆராயப்பட்டது.

சுருங்கக்கூறின் முக்காலத்தும் உள்ள அறிவுடைப்பொருளாம் உயிர்கள் இறைவன் திருவருளினாலே தமக்குக் கிடைத்த உடலைக்கொண்டு செம்மை வழியில் நின்று தன்னையும், தலைவனும் இறைவன் காட்சியையும் கண்டு மாட்சிமை பெற்று இவ்வுடலோடு கூடியிருக்கும்பொழுதே இறையின்பத்தை பெற்றுய்யவேண்டுமென்பதும் பின்னர் இறைவனுடன் ஒன்றுபட்டு முடிவற்ற பேரின்பப்பேற்றை அடைந்து எந்நாளும் இன்புற்றிருக்க வேண்டுமென்பதுமே இந்நூலை இயற்றி வெளியிட்டதின் நோக்கமாகும் என்று கூறுதலுடன் இந்நூல் இனிது முடிவுறுகின்றது.

குறிப்பு:- இந்நூலைப் பெறுபவர்கள் காய்தல் உவர்த்தலின்றி ஆழ்ந்து செம்மையாகப் படித்து நன்முடிவு கண்டு பயன்பெறல் வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

முற்றும்.

கிடைக்குமிடம்:—

இராமலிங்கம் அச்சகம்,
கூடலூர் ஓ. டி.

விற்பனையாளருக்கு 25% கழிவு உண்டு